
# நிழலின் காலடியோசை

கவிதைத் தொகுப்பு



மாத்தளை ஜெஸீமா ஹமீட்

# நிழலின் காலடியோசை
## (கவிதைத் தொகுப்பு)

கவிதாயினி : ஜெஸீமா ஹமீட்

# அணிந்துரை

இலக்கியச் செல்வர், அமுதகவி அரசு, அருந்தமிழ் அருவி, அபிவைத்தாஜ் அணிந்துரை

இன்தமிழ் சொல்லாளரான இவர் இசை முரசு, இசைச் சக்கரவர்த்தி நாகூர் E.M. ஹனீபா அவர்களின் ஆஸ்த்தானக்கவி (பாடலாசிரியர்)

"கவிஞர்களின் பேனாவிலிருந்து வருவது மையல்ல – அவர்கள் மூளை உருகி ஓடோடி வருகிறது என்றான் பிரான்ஸ் தேசத்து பெருங்கவிஞன் ஒருவன்". கவிஞர்கள் உருவாக்கப்படுவதில்லை உருவாகிறார்கள். "உள்ளத்துள்ளது கவிதை இன்ப உருவெடுப்பது கவிதை நலம் பயக்கும் கவிஞர்கள் நாயனால் தூண்டப்படுகிறார்கள் நபிக்கரசர்" நம் தமிழ், முஸ்லிம் பெண்களில் கவிஞர்கள் குறைவு! ஒருசிலர் உண்டானாலும் உன்னதம் பெற்றுவிடுகிறார்கள். நம் இலங்கைக் கவிதைச் செல்வி ஜெஸீமா ஹமீட் இவர் சுருக்கமான வார்த்தை வரிகளில் அற்புதமான கவிதை வடித்தெடுக்கிறார். வார்த்தை வனப்பறிந்து சொல்லின் சுவையறிந்து எழுதுவதில் வல்லரான சகோதரியின் எழுத்து ஏற்றம் பெற்றது. பாராட்டுகிறேன், தொடர்ந்து எழுதிடவும் தூய நெறிப் பெற்றிடவும் வாழ்த்துகிறேன்!

*அபிவை டி.எம்.எம். தாஜுதீன்*

*(அபிவையார்)*

*அபிவிருத்திஸ்வரம்,*

*தமிழ் நாடு,*

*திருவாரூர் மாவட்டம்*

# வாழ்த்துரை

ஜெஸீமா ஹமீட் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவியாகப் படிக்கின்ற காலத்தில் இருந்தே எழுத்துத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் சார்பில் அமைந்துள்ள "சங்கப்பலகை"யில் அவர் அடிக்கடி கவிதைகள் எழுதிவந்துள்ளார். அவரது திறமையறிந்து, அவரை நான் ஊக்கப்படுத்தி வந்தேன். கவிதைத்துறை மாத்திரமின்றி, நாடகம், பேச்சு என்ற பல துறைகளிலும் நாட்டம் கொண்டவராக அவர் விளங்குகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் சில ஆண்டுகள் துணை விரிவுரையாளராகக் கடமையாற்றிய ஜெஸீமா ஹமீட், தற்போது மாத்தளையில் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். மலேசியாவில் 2011 இல் நடைபெற்ற உலகத் தமிழ் இஸ்லாமிய மாநாட்டிலும் எங்களுடன் பங்குபற்றியிருந்தார்.

ஜெஸீமா ஹமீட்டின் கவிதைகள் அவரின் கவித்துவ ஆற்றலைச் சிறப்பாக பறைசாற்ற வல்லன. ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் செழுமைப் பெற்ற இலக்கியப் பக்கங்களை நிரப்புபவருள் ஒருவராக அவர் திகழ்வார் என்பதில் சந்தேகமில்லை. அவரது முதல் தமிழ்க் கவிதைத் தொகுதி வெளிவருவதையிட்டு, நான் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். அவரை வாழ்த்துவதில் நான் பெருமிதம் பெறுகிறேன்.

கலாநிதி துரை. மனோகரன்.<br>
தமிழ்த்துறை<br>
பேராதனைப் பல்கலைக்கழகம்<br>
02.05.2012

## உங்களோடு சில வார்த்தைகள்...

கவிதைகளுக்காக வாசகர்களோடு பேசுவதில் எனக்கு பெருமகிழ்ச்சி. என் ஆத்மதிருப்திகளில் ஒன்றாகவே இக்கவிதை நூலை வெளியிடுவதையும் உணர்கின்றேன். ஆனால் உயர்தரம் கற்கும் வரையில் கவிதைக்கும் எனக்கும் வெகுதூரம் என்றாலும் என் கிராமத்தின் அழகு கவிதைக்கான ரசனையை எனக்குள் ஊற்றி நிறைத்ததை எழுதத் தொடங்கிய பின்னர்தான் நான் அறிந்தேன். கந்தேநுவர தமிழ் வித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) மாணவியாகக் கற்றுக்கொண்டிருந்த எனக்கு தமிழ் பாடம் கற்றுத் தந்த திருமதி பாக்கியலட்சுமி ஆசிரியை அவர்கள் நான்கு வரிகளில் ஒரு கவிதையெழுதி காட்டுமாறு பயிற்சியொன்றைத் தந்தார். சினிமா பாடல் மெட்டுக்கேற்றவாறு பூக்கள் பற்றி ஒரு சிறு கவிதையை எழுதிக் காட்டிய பின்னர் வேறு எந்தக் கவிதையையும் நான் எழுதிப்பார்க்காத நிலையிலேயே உயர் தரம் கற்பதற்காக மா/ ஆமினா மகளிர் தேசிய பாடசாலைக்கு வந்தேன். அங்குதான் போட்டியென்ற பெயரில் எனக்கான கவிதை வாசலை எனது மதிப்புக்குரிய ஆசிரியை ஆயிஷா நோனா அவர்கள் திறந்து வைத்தார்கள். கவிதை எழுத வராதே என்ற என் பயத்தை என் உயர்தர வகுப்புத்தோழிகளான மஷாஹிமா, சமீரா, நஸ்ரீன், ரோஜா, ஸஹானி என அனைவருமே பத்திரிகைகளில் யார் யாரோ எழுதிய கவிதைகளையெல்லாம் சேகரித்துத் தந்து வாசிக்கச் செய்து என் பயத்தைப் போக்க வழிகாட்டினார்கள். என் தோழி பஸீஹாவின் கோயம் கூட பின்னர் நட்பாகி பல கவிதைகளின் கருப்பொருளைத் தந்தது. பஸீஹாவின் சகோதரிகளும்கூட என் ரசிகைகளானார்கள். மின்னா என் கவிதைத் தோழியாக சுற்றி வந்தாள். இவர்களே என் கிறுக்கல் வார்த்தைகளின் விருப்பமான வாசகர்களான போது நான் கவிதை சாம்ராச்சியத்தின் கற்பனை மகாராணியாய் முடிசூடிக் கொண்டேன்.

இன்னும் விசேடமாக இன்று என் கவிதை நூலே சமர்ப்பணமாகியிருக்கும் என் உயிர்த் தோழி ரீஸா வெற்றுப் பேனாவாய்க் கிடந்த என்னுள் கவிதையெனும் மையூற்றி தினந்தோறும் கவிதைப் பயிற்சி தந்தாள். பல பரிசில்களும் எனக்கு சொந்தமாயின. அவளது கவிதைகளையும்கூட என்நூலோடு இணைத்து வெளியிடுவது எனக்கு ஆத்ம சந்தோசம். அவள் நட்பின் சுகமும் பிரிவின் துயரமும், சமூகத்தின் கேவலங்களுமே எனக்கான பாடுபொருளாயின.

இந்த உணர்வுகளின் நீட்சி, பல்கலைக்கழக வாழ்வு தந்த வசந்த நினைவுகள், மஞ்சள் பூமரம், மஸீஹா, ஸரீனா, ஸஹ்ரா, மஸாஹிமா என்ற வடிவில் வந்த நேசத்தின் நெருக்கம் பிரிவு பல்கலைக்கழக கவிதை மேடைகள், நண்பர்களின் உற்சாகம், ராகிங் என அங்கிருந்த ஒவ்வொரு கணமும் எனக்கான கவிதை நேரங்களாயின.

கிறுக்குவதெல்லாம் கவிதையாகுமா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து கவிதைப்பயிற்சியளித்த கலாநிதி துரை மனோகரன். அவர் வளர்த்த கவிதைக் குழந்தைகளை தூக்கித் தாலாட்டும் தொட்டிலாய் சங்கப்பலகை, பேராசிரியர் நுஃமானின் வழி காட்டல்கள் என பல அனுபவங்கள் என் கவிதை வாழ்க்கையின் வளர்ச்சிப்படிகளாய் அமைந்தன. தமிழ்த்துறைப் பேராசிரியர் நுஃமான் அவர்கள் எனது "நிழலின் காலடியோசை" கவிதையை காலச்சுவடு எனும் இந்தியச் சஞ்சிகைக்கு அனுப்பியதோடு, அந்த சஞ்சிகையையே எனக்குப் பரிசளித்த போது மெய்சிலிர்த்துப் போனேன்.

2011 மே மாதம் மலேசியாவில் நடந்த உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மகாநாட்டில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பை எனது "பொறுமையின் தாயகம் பூமான் நபி நாயகம்" என்ற கவிதைப் பெற்றுத்தந்தது. அங்கு வைத்தும் கலாநிதி துரைமனோகரன் அவர்கள் இன்னும் எழுதும் படியும், நூலொன்றை வெளியிடும்படியும் ஆலோசனை வழங்கினார். இந்திய தமிழ்த்துறை விரிவுரையாளரான ஹாஜாகனி அவர்கள் எனது சிறந்த பத்து கவிதைகயை தனது ஆய்வுக்காகப் பெற்றுக் கொண்டதோடு, எல்லா கவிதைகளையும் தொகுத்து வெளியிடுமாறு உற்சாகப்படுத்திய போது, கவிக்கோ அப்துல் ரஹ்மானை சந்தித்து உரையாடிய போது, E. M. நாகூர் ஹனீபாவின் பாடலாசிரியர் எனது கவிதைகள் பற்றி சிறப்பித்து எழுதிய போது, குரீவெல ஹமீதியா கல்லூரி என் மனதை சாந்தமாக்கி கவிதையெழுதத் தூண்டிய போது, எனது கவிதைகளை ஆசையோடு வாசித்து விமர்சனங்களை முன்வைத்த சக ஆசிரிய நண்பிகளான ஸியானா, ரிசானா, முனீரா, ரதீனா, தவமலர் ஏனைய ஆசிரியைகள், உதயர்தர வகுப்பு மாணவர்கள் என ஓராயிரம் கவிதைச் சம்பவங்களின் தூண்டுதலிலேயே இந்த கவிதைப்புத்தகம் உங்கள் கைகளில் தவழ வருகின்றது. இந்தக் கவிதைகளில் ஏதாவதொரு ஒற்றை வார்த்தை உங்கள் இதயத்தை தொடுமென்றால் அதுவே என் வெற்றியும் ஆத்ம திருப்தியுமாகும்.

நேசங்களுடன்,

ஜெலீமா ஹமீட்

# சமர்ப்பணம்

ஆறாம் விரலாய்
பேனாக்கொடுத்து
என் கவிதைச் சுவையை
களம் கொண்டுச் சேர்த்த
என் கவலை மனசை
நலம் கொண்டு நிறைத்த
என் ஆத்மார்த்த தோழி ரீஸாவிற்கும்
எப்போதும் இளமைக் கனவுகளை
இலவசத் தூதனுப்பும்
என் எல்லா நேச நெஞ்சங்களுக்கும்
இது என் நட்பின் ஞாபகப் பரிசு...!

# உள்ளடக்கம்


01. அன்னைக்கு
02. நானொரு கடன்காரி
03. தந்தையின் ஞாபகங்கள்
04. வாழ்க்கைத் தோழன்
05. என் செல்லப்பிள்ளைக்கு
06. செஞ்சோற்றுக்கடன்
07. பொறுமையின் தாயகம்....
08. பன்றிக் காய்ச்சலும்...
09. நான் யார்
10. பர்தாவுடைய வாழ்வு
11. மணமகன் தேவை
12. பாகிஸ்தான் ஜிந்தாபாத்...
13. எரியும் காஷ்மீர்
14. தலைப்பைத் தொலைத்த...
15. ?
16. பால் வார்த்துப் போங்கள்
17. எது சரி...?
18. மலை சுமக்கும் வெண்பனி
19. நிழலின் காலடியோசை
20. நேசி.. நேசித்துக் கொண்டேயிரு
21. நெருப்பு நிலா
22. நேசமானவளே... ஏன்?
23. வருவாயா...?
24. புதிய உறவே...
25. உனக்காய்...
26. நட்பு
27. உன் ஞாபகங்கள்
28. முதல் நேசமும் நட்பும்...
29. நிலவு
30. எழுதாத டயறிகள்...
31. கவிதை நிலா...
32. இரவே முடியாதே...
33. பிரிவதற்கும் விழா
34. காதலுமில்லை கருமாதியுமில்லை...
35. நீயும் உன் நினைவுகளும்
36. உடைந்து போன உறவுகள்....
37. ஆண்கள் கவனத்திற்கு...
38. பொழியும் மழையில் நிரம்பும் குளங்கள்...
39. பூமித்தாய்க்கு வியர்க்கிறது...!
40. கவ்வாத்து மலைக் கனவுகள்
41. ஒரே குத்தில் கதையை முடி
42. பத்தனையில் ஒரு பயிற்சி முகாம்
43. என் தேசத்தின் எழுச்சிக்காய்...!
44. நிலைபெறத்துடிக்கும் சமாதானம்...
45. விடிவைத்தேடி
46. ரோஜா...
47. இரவின் ஜாலங்கள்...
48. வரப்பிரகாஷ்...
49. செம்மணி...
50. சுசந்திகா...
51. எனக்குள் விழாநடத்தும் உனக்கான...
52. ஒரு கூடைச் சோகம்...!
53. ஹைக்கூ கவிதைகள் சில...
54. எனதூரே எனதுயிரே...
55. ரீஸாவின் கவிதைகள்

# அன்னைக்கு

அன்னையென்ற சொல்லுக்குள்
அகிலத்தின் அன்பையெல்லாம் அடக்கி
என் தொடக்க வாழ்வுக்குப்
பூத்தூவிய,
சான்றோர் நிறைந்த
சபை முன்னே – எனை
அவைத்தலைவனாய்
ஆற்றுப்படுத்திய அன்னையே
என் உயர்விலும் தாழ்விலும்
இனிய ஆறுதல்
தாயில்லா உலகம்
நிலவில்லா வானமாய்
இருண்டு போகாமல் என்னில்
ஒளியாய்த்திகழும்
அன்னையே எனக்கு முதன்மையாவள்!



- 2003 -

# தந்தையின் ஞாபகங்கள்

கனவுகளில் நிஜத்தைத் தேடும்
ஒரு கலிகால வாழ்க்கை..
காலங்களைக் கடந்து
நிலாத்தூங்கும் வரை விழித்துக் கிடந்து
நாம் விளையாடிக் களித்த
அர்த்தமுள்ள அந்த நாட்களை
நினைவுகளால் தின்றுப் பார்க்கிறேன்...
வாப்பா என்றவொரு கருத்த உருவத்தின் பின்னேதான்
எங்கள் வருங்காலத்தின்
அத்தனை சுபங்களும் நிலைத்துக்கிடந்தது... !

அரை வயிற்றில் தூங்கப்போனாலும்
கலர் கலராய் கனவுகளை தூதனுப்பும்
அப்படியொரு சாஸ்வதப் பொழுது
அதன் பின்னர் வாய்க்கவேயில்லை..

அர்த்த சாமத்தில்
நாய்களின் ஊளைகளுக்கு நடுவே
ஊடறுத்துக் கேட்கும்
உங்கள் ஊழைப்பின் இருமல்...
ஒரு சாண் வயிரே
உலகத்தை கலங்கடித்த பொழுதுகளில்
எப்படி வாப்பா நீங்கள்
ஒன்பது வயிற்றுப் பசியைத் தாங்கி நின்றீர்கள்... ?

ஒழுக்கம் உங்களுக்கெப்படியோ ஆனால்
எங்களுக்கதனை உயிராய் ஓதி வைத்தீர்
ஏதோ படித்திருந்தீர் என்றாலும்
உங்கள் கையெழுத்தின் காம்பீரம்
என்னையல்லவா நிமிர வைத்தது...!

எங்கிருந்து கற்றீர்கள் துன்பங்களையெல்லாம்
ஒரு துடப்பங் கட்டையால் துார்த்துவிட்டு
எம் வாழ்க்கைக்கு வானவில் நிறமடிக்க...?
எதிர்கால ஜோதியை கண்களுக்குள்
ஏற்றி வைத்தீர்
அதுவே எம் வாழ்க்கைச் சுடராய்
இன்று பற்றிப் பிரகாசிக்கிறது வாப்பா...

என்ன செய்ய
என் உழைப்பில் சோறு போட எனக்கு வாய்க்கலியே
ஊருக்கு போடுகிறேன்
தர்மமாய் வந்துசேர
ஊனுறக்கம் மறந்துழைத்தீர்
எங்கள் மேல் இரக்கம் வைத்து
நாமிரக்கம் காட்டுமுன்னே ஏன்தானோ மறைந்து விட்டீர்
மறக்காமல் ஏந்திடுவோம் இருகைகள் உங்களுக்கே...!

# வாழ்க்கைத் தோழன்

பெருமூச்சுக்களுக்கிடையேயும்
உன் பெரிய உருவம்
தாராளமாய்த் தோன்றும்
எனினும்
எப்போதும் அருகில் வராத உன் முகவடிவை
யாரிடம் கேட்பது...........?
உன்னுடன் தான்
என் உயிரின் பந்தமென
எனையெப்படியே நீ பார்த்துக்கொண்டாய்
தட்டுத்தடுமாறி
உன் பார்வைகளில் மோதிக்கொள்ளாமல்
நான் பார்த்த பார்வையில்
உன் நிழற்படம்
மங்கலாய்த் தெரிகிறது...
ஒரேயொரு தரம் முகம் பார்க்கலாமா...?

## என் செல்லப்பிள்ளைக்கு

உன் நானாவைப்போலவே
உன்னையும் எனக்கு றொம்பப் பிடிக்கிறது...
வண்ணத்திகேட்கிறாய்
பொன்வண்டைப் பார்க்கிறாய்
தத்தி தத்தி பாயவா பாயவா என்று
சேற்றுக் கால் புதைத்து
உருண்டு புரண்டு சகதியாடுகிறாய்...
கவிதை மொழியில்
என் காகிதமெல்லாம் கோடுகிழித்து
கவிபடிக்கச் சொல்கிறாய்...
அவனும் தான்
அந்தவானம் என்னவழகுயென்பான்...
வண்ணங்கள் பாயும் வானவில் கேட்பான்
நகர்ந்து நடக்கும்
மேகங்களை யழைப்பான்
விருந்துக்கு வாங்க பறவைகளென்பான்...
விட்டு விட்டு ஒளிரும்
நட்ஷத்திரம் கோர்ப்பான்...
ஒளிந்து ஓடும் எலியையும் பிடிப்பான்
எல்லாமே சுகமென்பதை
தாயான பின்தானே
நானுணர்ந்தேன் என் மகனே....!



3th March 2010

# நானொரு கடன்காரி...

என் A/L கல்விக்காய்
நான் கண் மயக்கம் கொண்டிடாமல்
நீதானே – உன்
விழியுறக்கம் தொலைத்து நின்றாய்...!

வெறும் வயிற்றில் நான் போனால்
வாயு தொல்லை வருமென்றா
ஒரு பிடிச் சோறூட்டி
ஒழுங்காய் அனுப்பி வைத்தாய்
உன் பேச்சை தொடர்ந்திருந்தால்
எனக்கில்லை
நோயின் தொல்லை...

பல்கலையில் படிக்கும் போதும்
பானை பிடிக்க விடமாட்டாய்
கையழுக்குப் படுமென்றா
கரிபானை நீ சுமந்தாய்...?

காலமெல்லாம் உனைச் சுமந்தும்
கடன் தீரா தாயன்பை
நீ தந்து நிறைத்து விட்டாய்
உனக்கென்று உபகாரம்
எதைச்செய்தால் கடன் தீரும்..?

- 2003 July -

# செஞ்சோற்றுக்கடன்

அன்னையும் தந்தையும்
அள்ளித் தெளித்த
அன்புத்தாலாட்டு
உன் அறிவென்னும் ஒளிபாய்ச்ச
எனை அகரம் நோக்கி நகர்த்தி
என் வாழ்வை
சிகரமாகச் செய்த
சூர்யவதாரம் நீ......!

எண்ணும் எழுத்தும்
கண்ணெனக் காட்டி
அன்பும் அறமும்
பண்பெனப் போற்றும் சிறகினை
உன் பாதச்சுவடுகளில் தான்
இந்தப் பிஞ்சுப் புறா
பெற்றுப்பறந்தது...!

கிணற்றுத்தவளையாய்
கிராமத்துக்காட்டில்
கட்டின்றி அலைந்த என்னை
நாட்டு வளப்பமதும்
நாலறிவும் நான்படிக்க
ஏற்றிவிட்ட ஏணியதாய்
நீதானே
தோள் கொடுத்தாய்.....?

ஈரைந்து மாதங்கள்
கருவோடு எனை சுமக்க
வருடங்கள் ஐந்தே – அன்னை
மடிமீது நானிருந்தேன் – ஆனால்
என் இருபது அகவைக்கும்
நீ தானே
அறிவென்னும் விளக்கு வைத்தாய்...

சரி பிழைக்கிடையே
சிக்கித்தவித்த
என் மாணவப் பருவம்
சரியான பாதைக்குள்
கால் பதித்து நடந்திட
உன் கைகளைத்தான் பற்றிக்கொண்டேன்...

உள்ளம்
கடலாகிக் கொந்தளிக்க
உணர்வென்ற சுனாமிக்குள்
நான் சென்று சேர்ந்திடாமல்
அறிவுக்குச் செயலாற்றும்
அறிஞர் சபைமுன்னே
எனைச் சான்றோனாய்ச் செய்த
ஆத்மாவே நீதானே...

ஏற்றிவிட்ட ஏணியதை
எட்டி உதைப்பர்
சில படித்த மூடர்
தாய்மைக்கே
தட்சணை கேட்கும்
தரித்திர உலகில்
எம் வாழ்வை
அறிவின் சரித்திரமாக்கத்துடித்த
அற்புதப்பணியல்லவா உனது
ஈருலகுக்கும் உம்பணி
சாஸ்வதமாகுக....!

ஆசான்களே,
காலமெல்லாம் எம்மில்
கல்வித்தீ வளர்க்க
கால்களால் தவமிருக்கும் மகாத்மாக்கள்
நீங்கள் மட்டுமே தான்
உம் அதிசயப் பணிக்கு
இந்த ஒற்றைக் கவிதை
ஓர் உபகாரமா....?
இல்லையில்லை,?
இதுவொரு செஞ்சோற்றுக்கடன்....!

- 26th March 2009 -

பரிசு பெற்ற கவிதை

## பொறுமையின் தாயகம் பூமான் நபிநாயகம்

அய்யாமுல் ஜாஹிலிய்யா
இருள் சூழ்ந்த மணல் வெளியில்
முழு மதியாய் வந்துதித்தே
முழுவுலகும் ஒளிபதித்த
முஹம்மதெங்கள் நாயகர்
முழுப்பண்பும் வரப்பெற்ற
முன்னுதாரணப் போதகர்.

எழுத்தெண்ணிப்படிக்காத
இறைஞானப் பாலகர்
உம்மி நபி நீங்கள்
அஞ்ஞான இருள் துடைத்த
மெஞ்ஞானப் போதகர்...

தாய் தந்தை இழந்த பின்பும்
நற்குணங்கள் இழக்கவில்லை
ஆதரவாய் துணைநின்ற
அப்பாவும் இறந்த பின்பே
அபிதாலிப் நிழல் பெற்றீர்
இடையனாயும் பொறுப்பேற்றீர்
மலைக்குன்றின் தனிமையிலா
பொறுமையெனும் அணிபெற்றீர்...?

தொடர்ந்து வந்த நாட்களெல்லாம்
துயரங்களே பாய்விரிக்க
பாலைவனக் கோடையிலும்
பசும் மரமாய் வளர்ந்து விட்டீர்...

எதிர் கொண்ட கஷ்டமெல்லாம்
இறைவனுக்கே பாரமென்றீர்
ஹிராவிலா வரப்பெற்றீர்
அஞ்ஞான இருள் துடைக்கும்
ஆத்மீக ஒளியதனை...?

அதுவும் பிடிக்கலையோ
சூழ்ச்சி கொண்டு தாக்கினரே
உத்பாவும் அபூஜஹ்லும்
சிரித்த முகத்துடனே
பொறுமையதைப் பூசிக்கொண்டீர்...

அண்ணலே உங்களுக்கு
இருபத்தைந்தே வயதிருக்க
நாற்பது வயதெனினும்
பொறுமைக்கே இடம் தந்து
மணந்தீரே கதீஜாவை...
அது தானோ முதல் ஏற்றார்
ஏகனவன் மறைதூதை....?
விதவைக்கு வாழ்வளித்த
வள்ளலே உங்கள் குணம்
வந்திடுமோ எம்மவர்க்கு....
இக்கால இளைஞருக்கு
உம்மை விட்டால் பாடமெது...?

எழுச்சிப் பொறுக்காத
இழிவான குறைஷியர்கள்
அள்ளிக் குவித்தார்கள்
அழுகுடலை மேனியிலே
அண்ணல் நபி மணியே உங்கள்
அழகான மேனியிலே...
கற்பாதை சமைத்தனரே
அதை முட்கொண்டு மூடினரே
குப்பைக் கூழமதை
தலைமேலும் வீசினரே...
தூசு பட்டால் சந்திரனில்
வெள்ளொளிதான் குறைந்திடுமோ
நலவுக்கே வழியமைத்த
நாயகமே தாங்கி கொண்டீர்
விடிவுக்காய் ஏங்கி நின்றீர்...

முத்து முத்தாய் நீர் கொண்டு
முத்து முத்தாய்க் கண்ணீர் கொண்டு
முழுமதியை கழுவி நின்றார்
முத்து மகள் பாத்திமா
தந்தையை அழுதுத் தழுவிக்கொண்டார்
அன்பு மகள் பாத்திமா...
பொறுமைக்குப் பரிசுண்டு
போதுமம்மா, துயரமென்றே
பொறுமைக்கே புகழ்சேர்த்தீர்...

மண் தூவக் காத்திருந்த
கண்மீது மண் தூவி
கனி நபியை அனுப்பி வைத்தான்
எம்மிறைவன் மதினத்து மண்நோக்கி
மதீனத்துப் புழுதியெல்லாம் கஸ்தூரி மணங்கமழ்ந்து
நபிபேரில் மாறிக் கொள்ள
கண்ணாய் தவமிருந்தது...
மதீனத்து நபி தன்னில்
எதிர் கொண்டார் முதல் போரை
பத்றுப் போர் களத்தில்
வெறும் முன்னூரே பேர் கொண்டு
கரை கண்டார் குறைஷியரை
பொறுமையின் மனங்கொண்டீர்
இறைபரிசும் உங்களுக்கே...

இறைநாமம் தனைச் சொல்ல
பொறுக்காத குறைஷியர்கள்
போராடத் துணிந்தனரே
மீண்டும் போராட முனைந்தனரே
பத்ரென்ன உஹதென்ன
அகழ்தோண்டி மலையேறி
காற்றாய்க் கடந்தேகி
வயிற்றில் கல்வைத்துப் பசிதாங்கி
ஸஹாபாக்கள் உரம் கொள்ள
பொறுமையதன் பலம் பேசி
நட்டு வைத்தீர் வெற்றியதை
விட்டிடுமோ உம் பொறுமை
வெறுமையுடன் நீர் போக...?

ஒரு பெண் கொண்ட இல்வாழ்வே
பல சிக்கல் தனைச் சேர்க்கும்
பதினொரு மனைவி பெற்றே
பவித்திரமாய் நீதிசொன்னீர்
நாட்கணக்கில் தீனியில்லை
அதனால் நிலை மாறவில்லை
தீனுக்கே துணைநின்ற
அல்லாஹ்வின் நபி நீங்கள்
அகிலத்தின் ஒளி நீங்கள்
ஏழ்மையின் எதிர்ப்பையெல்லாம் புறங்கண்டீர்
பொறுமையெனும் ஒருகோலால்

கடன் கொடுத்த யூதனவன்
கடாசினான் நபி மணியை
தானறிந்த பலமொழியில்
உமருக்கோ முறுக்கேற
முன்பாய்ந்தார் முகம் உடைக்க
கற்பூர வாசனையாய்
கண்ணின் நபி பொறுக்கச் சொன்னார்
தன்பிழையை எடுத்துரைத்து...

மனங்கோணா மாண்பு நபி
மூத்தவர்கள் மகிழ்ச்சிக்காய்
புளிப்பதையும் பொறுத்து கொண்டார்
முகம் சுளிப்பதையும் தவிர்த்துக் கொண்டார்
தொழும் போதும் தோளேறும்
பேரரையும் தாங்கிக் கொண்டார்
பேரன்பில் பெரிய நபி...

தம்மகளார் திருக்கரங்கள்
காய்ப்பேறி கருப்பாக
விழி நீரும் உடைப்பெடுத்தே
கருணை நபி அழுது விட்டார்
சாந்தமதை மனங்கொண்டு
பொறுமையுடன் கரமேந்து
வல்ல நாயன் வழி சொல்வான்..

ஹுதைபியா விதிவசத்தால்
அபூஜந்தல் அழுதுவந்தார்
உடல் முழுக்க எரிகாயம்..
எப்படித்தான் மனது வரும்
எடுத்தெறிய மக்காவுக்குள்........?
மீறவில்லை வாக்குறுதி
விடை சொன்னார் பொறுமையதில்
போய்வாரும் அபூஜந்தல்
அல்லாஹ்வே உனக்கு துணை

மக்கா நகர் வெற்றி கொண்டீர்
ஹிஜ்ரி எட்டு வருடமதில்
இனிய விடியலதில்
இளம் பிறையின் கொடியசைய
கொடுமையிழைத்தோரெல்லாம்
ஓடி ஒளித்துக் கொண்டார்...
உஹதுப் போரதிலே
உம் சாச்சா ஹம்ஸாவை
கொன்றோரும் பார்த்திருந்தார்
அவர் ஈரலையே சுவைத்திட்ட
ஹிந்தாவும் பயந்திருந்தாள்

எப்படித்தான் மனது வரும்
எதிரிகளை விட்டு வைக்க...?
கட்டி வைத்துக்காய்ச்சினரே
சுடும் மணலில் சுமையாவை...
நெஞ்சில் கல்வைத்து கசக்கினரே
கருந்தோழர் பிலால் றழியை
எப்படித் தான் மனது வரும்
எதிரிகளை விட்டு வைக்க...?

பூமான் நபி நீங்கள்
பொறுமையின் அணி நீங்கள்
உங்களுக்கா மனது வரும்
பழிக்குப் பழி தீர்க்க
மன்னிப்பு மாலையிட்டே
பொது மன்னிப்பு மாலையிட்டே
எதிரியையும் தழுவிக் கொண்டீர்
அஞ்ஞானம் தோற்றது மெஞ்ஞானம் ஜெயித்தது.
அரக்கக் குணங்களதே
அரேபியாவை கோலோச்ச
இரக்கக் குணத்தாலே எல்லாமே பெற்றீரே

பொறுக்கும் மனதாலே பூமியையே வென்றீரே
நிறைகொண்ட கோமானே
பாடி முடிந்திடுமோ
உம் பொறுமையதன் மாண்புகளை...?
போகும் வரை உரைத்து நிற்போம்
லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலில்லாஹ்

- May 2009 -

# பன்றிக் காய்ச்சலும் டெங்கின் கூச்சலும்

சமுத்திர சாகரத்தில்
நீந்தும் உலகை
நிதானமாய்ப்படைத்த அவனியின் இறையோன்
பறவையினங்களும்
பறக்கா இனங்களும்
பலதாய்ப் படைத்து
பரவசம் செய்தான் மனிதனை...

பாடும் குயில்
ஓடும் ரயில்
உரசும் காற்று ஊறும் ஊற்று
சுடும் வெயில் சுடாத நிலவு என
பலதும் படைத்தே
அழகை நிறைத்தான்
படைத்த சிலதை
குறித்தே தடுத்தான்
மனிதனா விடுவான்....?
நன்றியை மறந்தே
நிந்தனைச் செய்தான்
வந்தது வினை...
வாங்கிக் கட்டியும்
விடவேயில்லை
அவன் வரட்டு கௌரவம்
விஞ்ஞானமில்லா – ஒரு
அஞ்ஞான நிலையில்
ஒன்றுமேறியா உம்மி நபிச் சொன்னார்
மெய்ஞ்ஞானமொன்றை
பன்றியதை படைத்தவனே தடுத்துள்ளான்
அண்டாதீர் அதன்பால்
ஆபத்து நேருமென்றார்...

ஞானம் ஞானமென்றே
ஞாலத்தைக் கெடுக்கும்
மேலைத்தேயமது
மெச்சிப் பேசியதா மறையை...?
இழித்துத்தள்ளியது
எம்பெருமான் வாழ்க்கையதை...!
இன்றேன்
விழிபிதுங்க தேடுகின்றார்
பன்றிக்காய்ச்சலுக்கொரு மருந்ததை...?

சிறிதொரு பூச்சி
இரத்தக் கலன்களை குறைக்கும்
சுவாசத்தை நிறுத்தும்
கண்ணீரைப் பெருக்கும்
காலத்தை உறுத்தும்...
வேடிக்கையுமிருக்கு
டெங்கின் உறைவிடமே
மருந்தின் மறைவிடமும்
புரிகிறதா விளையாட்டு...?

அறிவைப் பாறைசாற்றும்
ஆண்டவனின் அருள்மறை
அகிலத்தின் பொது மறை
ஆன்மீகத் திருமறையெனினும்
அற்புதமாய் எடுத்துரைக்கும்
இவ்வுலகின் குறைநிறை....

மேலைத்தேயம் மட்டுமா
கீழைநாடுகளும் கேவலமாய்ப் பேசியதன்
கெடுதியை உணர்ந்ததா....?
உணர்த்தத்தானோ இந்த ஏற்பாடு...?
உண்மை முஸ்லிம்களும்
உணர்வற்றப் போயினர்
நினைவுறுத்தத்தானோ
இந்த நிரந்தரத் துன்பம்...?

டெங்குவென்றால்
சுத்தத்தால் தப்பலாம்
பன்றிக்காய்ச்சலதன் கிருமிகளோ
காற்றாகத் தழுவும் கட்டியணைக்கும்
உயிர் மூச்சைப்பறிக்கும்
இனியேனும் இறை கட்டளையை
மறுப்பின்றி ஏற்குமா
இந்த மடமையுலகம்...???

- Dec 2009 -

மலையகச்சேவை

# நான் யார்...?

முஸ்லிமாய் பிறந்ததற்காய்
முதல் வாழ்த்தென் னிறைவனுக்கு
அல்ஹம்துலில்லாஹ்
முதல் கிப்லாவே யென் தாயகம்
என் பூர்வீக பூமி
வளர்ந்ததொன்றும் நினைவில்லை
இன்றென் வாழ்வு
அரியாசன முட்களில்...

அபாபீல்களுக்குத் தந்தையாய்
இந்திபாழா
சிறகு கொடுத்தவன் நான்
ஒரு போர்வீரனாய் வாழ்ந்தவரைக்கும்
உம்மத்துக்களின் இதயக்கதவுகளிலொன்று
திறந்தேயிருந்த எனக்கு
ஆகஸ்ட் – ஒன்றோடு – அகவை
எழுபத்தி மூன்றென்று நம்புவாரில்லை...

கலீல் ஜிப்ரானின்
காதல் தேசத்திலிருந்தே
ஹம்ஸாவைக் கொன்றவனை
நான் தேடினேன்...

சில்லறைகளாய்ச் சிதறி விழுந்தவனெல்லாம்
என் தங்கதேசத்தை
தகர்த்திட முடியாதென்பேன்...
முடங்க இடமின்றி உலகெங்கும்
பிதற்றித் திரிந்த உங்களுக்கு
என் ஆத்ம தேசத்தை
சரி பாதி அறுத்துப்போட
நானொன்றும் சிபியல்ல ....

வெற்றியே என் விடுதலை இயக்கம்
வீரமரணமே – என்
ஸஹாக்களின் முழக்கம்...
குருதியாற்றில் குளித்தாலும்
தீராத எம்மக்களின் ஈமானியத்தாகம்
மக்திஸை மீட்பதில் – எனக்கு
தோள் தந்ததொரு காலம்....
யூதர்களின் இரத்தத்தை
என்னைப் போல் பூசிக்கொண்டவனை
பிறிதெங்கும் காணேன் என்றான் ஏரியல் ஷெரோன்

ஓரங்குல நிலத்தையும் விட்டுத்தராத நான்
எதிரிக்கும் எழுபதுகளில்
இறைமையை தாரைவார்த்த போதுதான்
நியாயத்தின் புலியாய் சீறிய என் குணம்
யூத மகுடிக்கு முன்னே
படமெடுக்கும் பாம்பானது...
அந்தோ பரிதாபம்
உம்மத்தின் மனச்சிம்மாசனத்திலிருந்து
இறக்கப்பட்டு
யூதக் கூண்டுக்குள்
தானே விழுந்த சின்னக் குரங்கானேன்...

படித்தது பொறியியல்
கிடைத்தது பட்டம்
போட முடிந்தது
நாட்டுக்கும்
தலைவனாகிச் சட்டம்
இருந்தும்
இன்றெனக்கில்லை ஒளிவட்டம்
இப்போ எஞ்சியிருப்பதோ
ஒரேயொரு சிவப்புத்துவாய் மட்டும்..

இன்ஷா அல்லாஹ்
கப்றுக்குள் போகும் முன்
என் கல்பின் கனவு
பாலஸ்தீனை கொடுப்பதற்காய் இல்லையில்லை
மீட்டெடுப்பதற்காய் மாறிட
எனக்காய் – இந்த
யாஷிர் அரபாத்துக்காய்
ஒரு முறை பிரார்த்தியுங்களேன்.

- 2002 -

# பர்தாவுடைய வாழ்வு

மனிதம் செத்து
புனிதம் கெட்டு
பிணக்காடாகிப் போனது பூவுலகு
பின்னே
கண்ணியம் காத்து
புண்ணியமாய்ப் பெண்கள்
வாழ்வதெங்கனம் – என
அலுத்துக் கொள்வோர்க்கும்
விடையுண்டு வாருங்கள்...

மாநிலந் தன்னில்
மனித வாழ்வின் நெறிவகுத்த
வல்லோன் சொல் தன்னை
வள்ளல் நபி பகர்ந்து நின்றார்...
சிப்பிக்குள் முத்தாய்
பெண்கள் பத்திரமாய் வாழ
பர்தா ஒரு பரிசுத்த ஆடையென்று

பெண்களை
கண்களாய் காக்க மறந்து
போகப் பொருளாயும்
பொதுப் பண்டமாயும்
பகிரங்க விளம்பரமாக்கி விட்ட
மூளையற்ற மேற்குலகம்
மூர்க்கத்தனமாய் விமர்சிக்கிறது.
வாஞ்சையற்ற மார்க்கம்
வீணே
பெண்களை வீட்டுக்குள் பூட்டிவைத்தே
வதைக்கிறதென்று...
கண்ணுக்குத்தெரியுமா
இமையின் அருமை...?



சிற்றாடைக் கட்டி
சிற்றிடைக் காட்டி
சோசியலென்று இப்பூவனத்தையே
சோபையிழக்கச் செய்யும்
இப்பூவையர் நடுவே
காளையர் கண்களில்
காமத்தை தூண்டாத
பர்தாவுக்குள்ளான
இப்பாவையர் வாழ்வு புனிதம் தான்...

ஒழுக்கம் உயர்த்தி
இழி நிலை தளர்த்தி
ஈனச் செயலகற்றும்
இந்தப் பர்தாவுக்குள்தான்
பேரின்பத்தின் பாதை
புனிதமாய் புதைந்திருக்கிறது...

அங்க அடையாளந்தன்னை
அப்பட்டமாய் வெளிக்காட்டி
வெற்றுப் பெருமைக்காய்
வீண் பகட்டுக்காய்
கழுத்தென்றும், காதென்றும்
நகையணிந்து
நளினமாய்ப் பெண்கள்
வெளிவந்த போது தான்
ஓட்டுக் குடிசைக்குள்ளும்
ஒட்டியிருந்த நிம்மதி
ஒழிந்து போனது – இந்த
வனிதையர் வாழ்வும்
இழிந்து போனது...

பூட்டி வைப்பவைக்கு
போட்டியதிகமென்பதால் தான்
முத்து
சிப்பிக்குள்ளிருக்கிறது.
வைரம்
பெட்டிக்குள்ளிருக்கிறது...!
பெண்கள் வாழ்வும்
கண்ணியத்துக்குள்ளிருக்கிறது என்பதால் தான்
அதை காத்து நிற்கிறது
பர்தா எனும் பரிசுத்தத்திரை...
மாற்றமாய்
முந்தானையகற்றி
முழு நிலவு
தேகம் காட்டவரின்
மதிப்பிழந்து போகும் இந்த வாழ்வு
மாண்பிழந்து போகும்
அந்த வாழ்வும் தான் (மறுமை)

ஆடை குறைத்து
அலங்காரப் பதுமைகளாய்
அறிவென்று
பகுத்தறிவுமழிந்து
புதுமைப் பெண்களாய்
புலம்பித்திரிவதில் தான்
மேற்குல கண்ணியத்தில்
கற்பின் கருப்பொருள் என்றிருக்க
முறையே
மூடிமறைத்து
கல்வியுடன் கண்ணியமும் காப்பதே
கற்பென்பது
இஸ்லாத்தின் குரலாயிருக்கிறது.

கல்வி தொழில் மறுக்கவில்லை
திருமணத்தெரிவில்
உரிமையைத் தடுக்கவில்லை
மாண்புடனே மகிழ்ந்திருக்க தடையில்லை – மீறி
அவ்ரத் பேணா வாழ்வு அவலமென்கிறது
ஒழுக்கம் காணா உயர்வை
ஊனமென்கிறது...!

ஆக
அறிவின் சிகரமாய்த் தெரியும்
அத்தனை நாட்டிலும்
பெண் உரிமைக்காய்
கொடி பிடித்து கோஷமிடும்
கோரிக்கைக்கெல்லாம்
முடிவு (முற்றுப் புள்ளி)
பர்தாவிலிருக்கிறது
அதில்
பாதுகாப்பிருக்கிறது.

- 2002 -

பரிசுப் பெற்ற கவிதை

# மணமகன் தேவை

ஹறாமை விட்டு ஹலாலுக்கு வழிகாட்ட
எத்தனை பயான்கள்?
கறுப்புப் பணமாய் கைமாறும்
இந்த சீதனம் ஹலாலா ஹறாமா?

ஆடையில் கூட
அந்நியரை ஒத்திருக்க வேண்டாமென்று
அண்ணலெம் வாக்கிருக்க
சீதனமென்பதும் பிறர் சம்பிரதாயமென்பதை
நாம் புரிந்து கொள்வதெப்போது?

தொழுகை நோன்பைக் கூட
துச்சமாயெண்ணும் நீங்கள்
கைக்கூலி என்றதும்
சளைக்காமல் ஓடுவதன் சங்கதிதான் என்ன?
ஒரு வேளை உணவுக்கே
உழைத்துக் களைத்துப் போன எங்கள் வாப்பாவிடம்
உங்கள் மகன்களுக்காயும் சொத்துச் சேர்க்க
இனியும் உடல் பலமில்லை.

கையிரண்டின் உழைப்பே
மிகச் சிறந்ததென்ற கருத்திருக்க
பிடுங்கித் தின்னும் உங்கள் சோம்பேறித்தனத்தை
என்னவென்று மெச்சுவது?

காசுக்குத்தான் இந்த வாழ்க்கையென்றால்
நாம் அதனை வாங்க வேண்டாம்
மலிந்தால் சந்தைக்கு வருவது போல்
இந்த மாப்பிள்ளைகளும் விலை குறையட்டும்
அதுவரை நம் வயதுகள்
நலிந்து போனாலும் கவலையில்லை...

பணம் கொடுத்தால் பொருள் கிடைக்கும்
ஒன்றுமே கொடுக்காதவனுக்கும்
பொன்னோடு பெண்ணும் கிடைக்கும் விசித்திரம்
கல்யாணச் சந்தையில் மட்டுமே உண்டு...

மஹர் கொடுத்து மணம் முடிப்பதுதான்
மார்க்கத்திலிருக்கிறது – அதைவிட்டு
எடுத்ததிலிருந்து கொடுப்பதுதான்
இப்போ புது பெஷனோ
எப்போதிருந்து இந்த ஆண்களெல்லாம்
பெண்களாய் ஆனார்கள்...?

காசு திரட்டியே கூன்தட்டிப் போன
கடந்த கால வாப்பாக்களுக்காயும்
கொஞ்சம் கவலைப்படுங்கள்
எதிர்கால வாப்பாக்களே
உங்கள் நிமிர்வெல்லாம் குனிவதற்கே...!

ஏவல் விலக்கலில் மட்டும்
ஏந்தல் வழி நடக்கும் நீங்கள்
இந்தச் சீதனச் சாக்கடையை
யார் சொல்லித் திறந்தீர்கள்...?
கன்னியர் வாழ்வதனை கரியாக்கும் ஆண்களே
கவனம்
உங்களை நரகின்பால் நகர்த்திவிட
எங்கள் கண்ணீரே சாட்சியாகிட வேண்டாம்..!

**- 2002**

அல்ஹஸனாத்
இலங்கை முஸ்லிம் சேவை
(கவிதைக்களம் 2002)

# பாகிஸ்தான் ஜிந்தாபாத்

பாகிஸ்தான் ஜிந்தாபாத்துக்குப் பின்னே
ஒரு அலி ஜின்னாவின்
சரித்திரமே சங்கமமாகியிருப்பது
எத்தனைப் பேருக்குத் தெரியும்...?
விசிரும் மட்டையிலிருந்து
விரரெனப் பறக்கும்
வெற்றுப் பந்துகளுக்கல்லவா
எம் வீரச்சிங்கங்கள்
ஜிந்தாபாத் கோசமிடுகின்றன...
அப்படியல்ல காளையர்களே
இருபதிலிருந்து
தன் இறுதி மூச்சு எழுபது வரையில்
அந்த வீர இளைஞன்
இஸ்லாமியர்களுக்காய் வாழ்ந்தான்.
பத்து வயதிலும் படிப்பு வராத அவன்தான்
இன்றைய பாகிஸ்தானின் தேசத் தந்தையென்றால்
எப்படி நம்புவீர்கள்...?

ஏ யெல் படித்தும் கூட
தம் வாழ்க்கைக்கென
ஒரு ஏணிக்கட்டத் தெரியாத
எத்தனையோ இளைஞருக்கு
இவரின் பாடம் ஒரு தோணியாகலாம்...

லண்டன் மாநகரம் இவரை
வணிகத்துக்காய் வரவேற்றுக் கொண்ட வேளை
சட்டத்தில் சிரத்தைக் கொண்டு
பிரித்தானியச் சட்டத்தையே புரட்டியடித்து
இந்தியத் தாயின் தோள் காக்கத் துணிந்த வேளை
இவர் வயதென்னவோ இருபதிற்குள்ளென்றால்
எப்படியிருக்கிறது உங்கள் மேனி..?

இளவயதில் பரிஸ்டர் வென்ற
இவரொரு இந்தியப்பிரஜை..
இனவாதப் பேய்கள்
இவரை இழுத்து வீசிய போதுதான்
பதறிப் போய் விழுந்தார்
பாகிஸ்தான் கோரும் மண்ணுக்குள்...!
இலங்கையின் மைந்தர்களே
ஏதேனும் புரிகிறதா..?
கொஞ்சமேனும் வரலாற்றை
தொட்டுப்பார்க்காமல் விட்டு
வெறும் சூதாட்டப் புரளிகளுக்குள்
உருண்டு புரளும்
எம் நாளைய தலைவர்களே...!
கிரிக்கெட் இச்சை பிடித்த
உங்கள் வெற்று மூளைக்குள்ளிருந்து
இன்னொரு ஜின்னா
எப்படி பிறப்பார்...?

புரட்சிக் கவிபாடி
பொது ஒற்றுமைக்கு தோள்கொடுக்க
பேனாவையே வெற்றி வாளாக்கிய
வீர இக்பால் எப்படி நுளைவார்
எம் நெஞ்சுக்குள்...?

இஸ்லாத்தின் மைந்தர்களே
நீங்களும் ஒரு மாற்று வரலாறு படைக்க
ஒற்றுமையின் கயிற்றை
பற்றிப் பிடிக்காது போனால்
மர்ம மனிதர்களே
உங்களை ஆட்கொள்ள வருவார்கள்.

அதற்குள்
அறிவென்னும் கோல் பிடித்து
எதிர்கால வரலாறு
எமக்கென்று பதியுங்கள்
அதற்கான பாடங்கள்
பலவுண்டு முன்னோரில்...
"சொந்த வரலாறு அறியாத
சமுதாயம் ஒரு காலும்
முன் செல்ல மாட்டாதென"
இக்பாலே இயம்பிய பின்
இன்னுமா தயங்கி நிற்பீர்...?
முஹமதிப்னு காசிம் முதல்
முஹமதலி ஜின்னாவரை
வெற்றி வரலாறே

வேரோடிக் கிடக்கிறது...
எடுத்துப் படித்திட்டால்
எத்தனையோ சுதந்திரங்கள்
அறிவின் வாசலிலே
அழகாக மணக்கிறது
அதனால்தான் நெஞ்சம் கணக்கிறது
ஆகஸ்ட் 14 இது பாகிஸ்தானின் மாதம்
அதுவும் நமக்கொரு பாடம்
ரமலானுக்குள் நின்று
கரமேந்தும் வேளை
எம் ஒற்றுமைக்கே கேளுங்கள்
அதுவே உலகை ஆட்கொள்ள இறைஞ்சுங்கள்
பாகிஸ்தானில் வெடிக்கும் குண்டுகளும்
சிதறும் உயிர்களும்
அழியும் பயிர்களும்
அதன் சுதந்திரத் தினத்தோடேனும்
தூரவாகிப் போகட்டும்
பாகிஸ்தான் ஜிந்தாபாத்..!

- 2011 -

# எரியும் காஷ்மீர்

அறிவியல் நாகரீகத்தில்
அதிமேன்மையென அறைகூவும்
அதிமேதாவிகள் எடுத்த முடிவிலும்
ஒரு ஓட்டை...
இந்திய பாகிஸ்தானுக்கிடையே
காஷ்மீர் வடிவில்
கண்ணீர்ச் சிந்துகிறது...

தினம் தினம்
சிந்துவோடு கலந்து மறையும்
இவர்களது முகாரியும்
சர்வதேச செவியில் விழாத
மௌனராகமாய்த் தொடர்கிறது...

காலனித்துவத்தின் காலடிகளுக்காய்
சொர்க்காபுரிகளை
சுவீகரித்த நீங்கள்
இந்திய பாகிஸ்தானுக்குப்போல்
அந்த அப்பாவி தேசத்துக்கும்
ஒரு முக்காடுப் போட்டிருந்தால்
ஏனிந்த துன்பம்...?
முஸ்லிமென்ற பாவத்துக்கா
அவர்களின்
இரு நூற்றாண்டு சரித்திரத்தை
குருதியே எழுதிச் செல்கிறது...?

நீங்கள் வெற்றியாளர்கள் தான்
உங்கள் பீடிகள் நெருப்பெடுக்க
பல தேசங்கள் பற்றியெரிகிறது...
பாலஸ்தீன், பாகிஸ்தான், காஷ்மீர் என
கணக்கற்ற நாடுகளில்
உங்கள் தீர்ப்பும்
கறைபடிந்தே கிடக்கிறது...

இஸ்ரேலை வளர்த்து விட்டு
பாலஸ்தீனை புதைப்பது போல்
இந்தியாவை இயக்கிவிட்டு
காஷ்மீரையுமா களவாடுகிறீர்கள்...?
இன்னுமா உங்கள் வீட்டோ பவர்
காஷ்மீருக்கு கைகூடவில்லை...?

செறிய நாய்களைப் போல
இங்கே
காஷ்மீரில் களவெடுக்கும்
எம் பெண்களின் கற்பு சுமப்பதும்
உங்கள் எதிரிகளென்பதை
எதிர்காலம் உணர்த்தும்...

தேசங்களெங்கும்
முஸ்லிம்களைத் தின்னும்
சர்வதேச எதிரிகளே
சன்னங்கள் ஒரு நாள்
ஈமானுக்குள் சரணடையும்
அப்போதும் நாம்
முஹம்மதின் உம்மத்தாய்
உங்களை
முழுமையாய் மன்னிப்போம்
காஷ்மீரில் மீண்டும்
ரோஜாக்கள் பூக்கும்...!

- 2011 -

## தலைப்பைத் தொலைத்த கவிதை

நினைக்கக் கூறியும்
அடிக்கடி மறந்து போகும்
அன்பற்ற வார்த்தையாய்
நீ மட்டும்...

அர்த்தங்கள் பார்க்கும்
அகராதியில்
வாழ்வின் எதிர்ப்பதமாய்
இத்தனை
பாடங்கள் சொல்லும்
உனக்கு நிகர் நீயே தான்...?

ஒளிந்து கொள்ள
ஓரிடம் தேடினாலும்
நுழைந்து வந்து
நுதழ் பற்றியிழுக்கும்
உன் அழைப்பில்
நொறுங்கிப் போகாதார்
யாருளர் சொல்..?

நிறைந்த அன்பை
நீடித்த வாழ்வை
நொடித்துப் போடும் புல்லுருவி
நீ மட்டும் தானா...?
ஏன்
நட்பைக் குலைத்து
நிஜ அன்பை மிதித்துப்போட்ட
நயவஞ்சகக் தோழியிலும்
எனக்கெதிராய்
நீதானே குடியிருந்தாய்...?

ஊமை வடிவில்
நீ உதிர்க்கும் வார்த்தையில்
கோடி சனமும்
மண்டியிட்டமும் மகிமை
வேறெவர்க்கு உண்டு...?

நேசம் பாசம்
பட்டிணி பட்டோபம்
அத்தனைக்கும்
சட்டெனக் கிடைக்கும்
உன் மத்தியஸ்த்தத் தீர்ப்புக்கு
மேன் முறையீடேது...?

நேர் கொண்ட பார்வையில்
நிமிர்த்த நன்னடையில்
சிங்கமென வாழ்ந்தவனை
சிறு பூனை செய்து
நீ காட்டும் சாகசம்
உன் வரவின் அறிகுறியா...?
வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும்
உன் வசந்த காட்டுக்கு
மரணமெனும் பெயர் சூடி
வாய் மூடி ஒருதரம்
வரத்தானே வேண்டும்...!

- 2003 -

# ?

உலகக் காதலெல்லாம்
உன்
உறவுக்காகவே...

நீயல்லாது
நீண்ட ஆயுளை
யார்தான் தரக்கூடும்...?

நம்பிக்கை ஏணியை
நீதான்
நளினமாய் நகர்த்திக் கொண்டிருக்கிறாய்...

கனவிலேனும்
ஒரு கற்பக தருவின் வரம்
கால தாமதமின்றி
பலித்துவிடுகிறது...

சந்தோசத்தின் சாஸ்வதமே
நீ தரும்
தோழமையில் தான்
தொடங்குகிறது....

யாரோடுமில்லாத
ஓர் ஆகர்ஷணம்
உன்னை நினைக்காத போதும்
வந்து விடுகிறது...

வாழ்க்கையின்
பக்கங்களை
காலந்தோறும் நீதான்
வரவில் அல்லது
முடிவில் வைக்கிறாய்...

வைகறைப் பூக்கள் கூட
உன்னால் தானோ
உற்சாகமாய்
மலர்கின்றன...?

ஒரு மௌனப்பொழுதின்
ஒரு பேசாத வார்த்தையின்
அத்தனை அர்த்தமும்
உனக்குள்ளிருந்தே
புறப்படுகின்றன...

ஒரு உயிரில்
நீ
நிரந்தர ஓய்வெடுக்கும் போது
உலகும் கூட
ஒதுங்கிக் கொள்ளும் விந்தை
உனக்கு மட்டுமே சொந்தம்

இத்தனை நேசங்களுக்கும்
நெருக்கமாகி
உணர்வலைகளில் நீந்தும்
உன்வரவு
என்னிடத்தே
இறையன்பை கூட்டுகிறது...

உடலைப் பலமாக்கி
உள்ளத்தை இதமாக்க வரும்
"நித்திரையே"
நீ வராத போது தான்
தீராத
நோய் வந்து சேர்கிறது...

எனினும்
சோம்பேறிகளுக்கும்
நீயே சோப்புப் போட்டுத்திரிவதால்
சிறு வருத்தமும் உண்டெனக்கு...!

- Feb 2004 -

## பால் வார்த்துப் போங்கள்

ஒரு யுக சோகத்தின்
கண்ணீரோடு
பிஞ்சிலிருந்தே
நெஞ்சடைத்து நிற்கும் – என்
பால்யகாலத் தோழியே!
நீ வாழ்வோடு செத்துக்கொண்டிருப்பது
எனக்குள்ளும்
ஒரு வடியாத சோகமானது...

உனக்கான தென்றலில்
புயல் வைத்ததாரோ?
நிலவின் மனம் கூட
தனலானதே...

உன்
மௌனத்தின் யாகம் கலைக்க
உன் கண்ணியத்தின் வழியடைக்க
வந்த ஓர் அந்நியனின் அவதூறு
உன்னை
என்ன செய்திட முடியும்...?

பெண்களின்
உள்ளங்களைக் கொன்றே
பிழைப்பு நடாத்தும் பேர்வழிகளின்
ஈனவார்த்தைகளுக்கா
அழுகின்றாய்...?
பறக்கும் பட்டாம்பூச்சியாய்
வானத்து நிலாமகளாய்
சுற்றி வந்து சுடர்பரப்பாமல்
ஏன்
சோகப் பிரளயங்களுக்குப் பின்னால்
நீ அமாவாசையாக வேண்டும்?

பறக்கத் துடிக்கும் உன்
சிறகுகளுக்கு
சிறிது விடைகொடு
உனை
வட்டமிட்டிருக்கும்
சோகமேகங்களுக்கு
கொஞ்சம்
கலையச் சொல்லிக்கொடு

உன் வேதனைகளை
எனக்கு நீ
பங்கிட முடியாவிட்டாலும்,
என்
இறைஞ்சுதலாலேனும் – அவை
தீர்ந்து போகாதாவென
சோகமாய்ப் பார்த்திருக்கிறேன்.

அரிவையே,
அர்த்தம் நிறைந்த
சோகங்களுக்குள்
நீ ஆழ்ந்துபோவதை
என்னால்
ஆட்சேபிக்க முடியாதுதான்,
ஆனால்
அற்பர்களின் அரங்கேற்றத்தால்
உன் பெயருக்கு
களங்கமென்பதை
ஆதரிக்கவும் முடியவில்லை...

இறுதியில்
தோழிக்காய்
ஓர் ஏழையின்
வேண்டுகோள்
தோழர்களே!
அவதூறுக்கு எண்பது
கசையடியென்பது
மார்க்கத்தின் விதி
பழித்துரைக்கும் பாவம்
மிகச்சிறிதல்ல – வீணே
மங்கையர் கண்களில்
கங்கையைப் பெருக்காமல்
பால்வார்த்துப் போங்கள்....!

- 1999 -

அல-இன்ஷிராஹ்

# September 11

என் நினைவு வானத்தில்
ஒரு நிலவாக வாராமல்
ஏனடி
ஒஸாமாவாய் உரசிப்போனாய்...
உன்னை கண்டு விடும்வரை
அமெரிக்காவைப் போல்
எனக்கும் தான்
ஏது நிம்மதி...?

செப்டம்பர் 11ஐப் போல்
இரவுகளனைத்தும்
கனவுகள் வராதபடி
இமைகளுக்கிடையே நீ...!
பாலைவனப் போர்க்களத்தில்
நீர் சுமக்கும் ஒட்டகமாய்
உன்னைச் சுமந்தபடி நான்...!

அஹிம்சாவாதிகளாய்
பிரார்த்தனை கூடங்களெங்கும்
பயங்கரவாத இதயங்களுடன்
அமெரிக்க முகங்கள்...
உன்னைக் காட்டிவிடாத
என்னைப் போல...!!!

"பெண்டகன்"
இரு நூற்றாண்டுகளின்
இணையற்ற முயற்சி
கண்மூடும் கணங்களுக்குள்
கலைத்துவிடாதே
என் காதலையும்...!

அமெரிக்கப் புல்வெளிகளில்
பயிற்சிப் படைகளின்
ஓயாத முயற்சியை
ஆப்கானிய டோரா போரா
கேள்விக்குறியாக்கியதைப் போல்
என்னையும்
முற்றுப் புள்ளியின்றியே
விட்விடுவாயோ...?

- 2001 -

# எது சரி.....?

தொலைந்ததை
தேடிக்கொண்டு
தொடர்ந்தும்
மௌனவிரதமிருக்கிறோம் நாம்
எதற்கு....?

வார்த்தைகளின் நீடிப்பில்
விரிசல்
விழுந்துவிடும் என்பதாலா...
இல்லை
வலம்புரிச்சங்கைப் போல்
கரைக்குவராத
ஆழத்தில்
நம் உறவின் அர்த்தமும்
அமிழ்ந்திருக்கிறது என்பதற்காகவா...?
இரண்டிலொன்றை கோடிடு
நீ
எதைச்சரியென்கிறாயோ
எனக்கும்
அதுசரிதான்
ஏனெனில்...

- 24 Feb 2002 -

# மலை சுமக்கும் வெண்பனி

கலைந்து கிடக்கும் மேகங்களை
கவனமாய்க் கோர்க்கும்
அங்கொருகாற்று...

அடிவானின் சிவப்பை
அடிக்கடி மறைக்கும்
வெண்பஞ்சு மேகத்தை
உன் நினைவைத்தடுக்கும்
இடைஞ்சலென
செல்லாமாய்க் கோபிப்பேன்...

ஆர்ப்பரித்த அலை
அப்படியே எழுந்து நின்றது போல்
மலை சுமக்கும் வெண்பனி
என்னில் (உறைந்து) கிடக்கும்
உனது நினைவுகளாய்...

அடிக்கடி நிற ஒற்றுமைப் பார்க்கும்
உனதும் எனதும் கைகளாய்
கறுப்பு வெள்ளையில்
கலந்து சிரிக்கிறது
இந்த அந்திவான மேகங்கள்...

மலையேறி வந்தேன்
உன்னை மறக்க
கூடவே ஊர்ந்து வந்திருக்கிறது
ஒரு எறும்பெனவே
உன் நினைவு....

என் எட்டு நாள் வனவாசம்
எண்ணிய கருமம் துணியாமலே துவண்டு
உன் நினைவுகளுடனா
முடிந்திருக்கவும் வேண்டும்...?
என் முட்டாள் இதயத்துக்கு
விரதம் புரியவில்லை
அடிக்கடி உன் விரல் தீண்டுகிறது...

- 13 April 2004 -

# நிழலின் காலடியோசை

என்
உள்ளச்சிறையில்
நீயொரு
ஆயுள்கைதி
யாருக்குமே
உன்னை பிணைதரமறுக்கும்
இந்த
நீதியே
உன்னில் சிறைப்படத்துடிப்பதை
நீ
எப்போது அறிவாய்...?

பூக்களின்
புன்னகைச் சிதறலில்
பாதையோரத்து
சிறு நதியின் சலசலப்பில்
விரிவுரையறையின்
நிசப்தத்தில்
நானுன் நேசத்தை
ஆழமாய் உணர்கிறேன்

சிறியதொரு பூவின்
உதிர்வுக்குப் பின்னேனும்
புயல் காற்றில்
தலைவிரித்துப் புலம்பும்
மரங்களின்
மரண ஓலங்களிலேனும் சரி
நீ இவளை
நினைத்துப் பார்த்திருக்கிறாயா...?

காற்றென்னைக்
கடந்து போகையிலும்
நிழலென்னை
தொடர்ந்து வருகையிலும்
அதன் காலடியோசை
உன்னுடையதோவென
திடுக்கிட்டுத் திரும்புகிறேன்...



ஞானம், தினகரன், நவமணி

- 29 Aug 2001 -

# நேசி...., நேசித்துக் கொண்டேயிரு

உன்
நேசம் கிடைத்ததும்
என்
மனத்தோட்டம்
பொசுக்கென
பூத்ததை யாரறிவார்...?

போதுமென்ற மனதிற்குள்
நீ மூட்டிய
அன்புத் தீ
என்
திருப்தியை தின்றுவிட்டது
நேசி
நேசித்துக்கொண்டேயிரு

இனி
என் இதய தேசத்தில்
பனித்துளிகளை
விதைக்க வேண்டியவளும்
நீயேதான்

தேடித்தோற்ற
எனக்குள்
நீதான்
பொறுமைப்பூக்களை
நட்டுவைத்தாய்
இனியும்
புயலை கிளப்பிவிட்டு
என்
தவத்தை கலைத்துவிடாதே...

- 2000 -

# நெருப்பு நிலா...

உன் வருகைக்குப் பின்னால் தான்
இந்த வளாகத் தென்றலை
சுவாசிக்கவே தொடங்கினேன் சுகமாக
மகிழ்ச்சிப் பூக்களுக்கு – எனை
மகாராணியாக்க
முயற்சித்துக் கொண்டிருப்பவளே...
நீ என் நினைவுக்குள் வந்த
நெருப்பு நிலா...!
தவறியும் உன் பிடிவாதங்களுக்குப் பின்னால்
முற்றுப் புள்ளி வைத்து விடாதே
அது தான்
எனக்கு மிகப்பிடித்திருக்கிறது...
பிரிந்த பின்னும்
உன் நினைவுகள் என்னை சுடவேண்டும்
ஏ ..... தூரத்து விண்மீனே
என் துயரக்கூடுகளில் நீயேற்றிய தீபம்
மகிழ்ச்சிக் கரையேறத்தான் துடிக்கிறது...
மரங்களுக்குள் என் முன்னேற்றத்தை
மறைத்து வைத்தவளே – அதுவே
என் வீட்டு முன் கண்ணாடியில் – எனக்கான
முகமன் வார்த்தையானது

- 2003 -

## நேசமானவளே.... ஏன்?

வீசிய பொருளில்
நேசத்தை
நிஜப்பட செய்தவளே
நெருங்கியே
இருப்பதாய்க் கூறி ஏன்
தூரவாகிப் போனாய்....?

அழுதாலும்
கண்ணீர் இனிக்கும்
உன் நேசம்
என் வாழ்க்கை
ரோட்டின் முன்னால்
நாற்காலிபோட்டு
அமர்ந்திருக்கிறது...

கடந்த காலத்துக்குள்
என்
நிகழ்காலத்தை முடிந்து
கண்டுக் கொள்ளாத குற்றத்துக்காய்
மனதுக்கு
மரணதண்டனையளித்தவளே

ஓராயிரம்
வார்த்தையிலும்
சொல்லித்தோற்ற அன்பை
உன்
விழியிரண்டில்
வினாடிகளில் சொல்வது
எப்படிச் சாத்தியமானது....??

- 2000 -

# வருவாயா..........?

நீ போய்விட்டாய்
நான் நிற்கிறேன்
நீயில்லா வெறுமையில்...
ஒரு காலம் வரப்போகிறது
நிரந்தரத்தனிமையில்
இவ்வெற்று மரங்களை
வெறித்துக் கொண்டு
அப்போதும்
இப்படியே நிற்பேன்
ஆனால்
இம்முறை நீ வருவாய்...
தொடர்ந்தும்...?

துயரக்கூடுகளில்
இரவு வெளிச்சம்
எனக்கு மட்டும்
இருட்டாய்த் தெரியும்!
நீ வருவாயா...
கண்களின் திரைகிழித்து
காற்றுக்கும் பூவுக்கும்
என் கவிதைகளை கனிவு சுமந்ததாய்
கொண்டு சேர்க்க....?
பகைத்துக் கொண்டும்
அருகிருந்தபோது
உனக்குமெனக்கும்
ஓர் உறவிருந்தது
இனி....?
பாசத்தைப் பூட்டிவைத்துக் கொண்டு
எரிச்சலாய் ஒரு பார்வை பார்க்க
எப்போதும் நீ வேண்டும்
வருவாயா...?

முறைத்து
பின் முறுவலிப்பதற்குள்
இந்த
மூன்றாண்டு முடிந்திடுமென்பதை
யார் முடிவு செய்தோம்...?
நீ மனதுக்கு தண்டனையளிக்க
நான்
முரண்பட்டு நின்றபோதும்
உனக்கென்று தான்
என் உறவிருந்தது...
அப்போதும் நீ வந்தாய்
உனக்கேயான
சமாதானச் சொற்களுடன்
எனக்கோ
மௌனமே சிறந்ததாயிருந்தது
ஆனால்
உன்னோடு பகையில்லை...

உனக்கும் எனக்குமான
இடைவெளிகளில்
கற்பனைக்கு நிஜம் கொடுத்து
அடம் பிடித்தாய் நீ...
ஆனால்
விசிறப்படும் சில்லறைகளாய்
எனக்குள் சீற்றமிருந்தது
ஏனோ தெரியவில்லை
உன்னை மட்டுமேதான்
இந்த உலகிலேயே
நான் தண்டிக்கவில்லை

நீ யுத்தம் தான்
எனினும்
இனியும் நான்
சமாதானத்திற்கே
சாதகமாயிருக்கிறேன்
வருவாயா...?

- 2002 -

# புதிய உறவே...

பேசவே இடந்தராது
பாசத்தை மட்டும்
மீதி வைத்து போன
என் புதிய உறவே
பாஷை எமக்கிடையே
வேலியிட்டபோதும்
நேச
உணர்வுகளிலென்னவோ
அருகருகேதான்
அமர்ந்திருக்கிறோம்...

சோகம் சோகமென்றே
எனக்குள்
சுகம் வளர்த்தது
நீதான்!
கோபம் கோபமென்று
ஏன்
தாபத்தை தந்து
தணிந்து போக
துணிகிறாய்...?

- 2003 -

# உனக்காய்

என் வானத்தில்
நானறியாமலே
ஒளிவீசிய
பார்வை வலைவீசிய – ஒரு
பெண்ணிலவுக்கு
இக்கவிதை
காணிக்கையாக்கப்படுகிறது...

ஒரு கார்காலத்தில்
என் நினைவுகளைக் கொண்டே
நீ நனைந்திருக்கிறாய்
நடந்திருக்கிறாய்!
என் விழியிரண்டிலும் மழை
ஒரு கோடைக்கால பின்னிரவில்

பிரிவை
வெறுத்திருந்தால்
நம் நேசத்தின் நிறமும்
மௌனத்திலேயே
மறைந்து போயிருக்கும்
மறுபடி
பேசத்தூண்டிய
பிரிவின் உணர்கள் தான்
நம் நேசத்தை
நிஜப்பட செய்திருக்கிறது...

பிரிவே
உன்னை பிரியப்படுகிறேன்
ஊமையாய்ப் போகாது
என் நட்பை
உயிர்பெறச் செய்தமைக்காக....

"நட்பு"
நந்தவனத்தில் பூக்களல்ல
செடிகள் – அடிக்கடி
ஆனந்த நிகழ்வுகளை
அள்ளிச் சொரிவதால்

ஓர் அமைதிக்குள் (உனக்குள்)
இத்தனை அதிர்வுகளா?
எனக்குள்தான் அறிந்தேன்
ஏ புன்னகைப் பெண்ணே
நானும் உன்னை நேசித்திருக்கிறேன்
நம்புகிறாயா....?

நேற்றுகளில் – நீ
சேமித்திருந்த அன்பின் மொத்தமும்
இன்று
என் நாட்களை அழகுபடுத்துகின்றன
பதிலுக்காய் – என்
நகர்வுகள் – உனை
கவலைபடுத்தியேயுள்ளன
மன்னிப்பாயா....?



- 2001 -

# நட்பு

உள்ளத்து
உணர்வுகளை
அத்துணை இனிதாய்
வார்த்தைகள் சொல்லாது
என்றாலும்
வார்த்தையிலும்
நான் உன்னை நேசிக்கின்றேன்....

உதயம்
பின் அஸ்தமனம்
என்பதொன்றும் உண்மையல்ல
நானுனக்கு
என் நட்பின்
அத்தனைச் சிறகுகளையும்
பரிசளித்து விட்டேன்
என்பதைவிட



காதலின் சாரம்
கவிதையிலிருப்பதாய்
கண்டவர்கள் சொல்லட்டும்
உன் நட்பின்
விதை விழுந்த இதயத்தில்
இதைவிட கனிவாய்ச் சொல்ல
வார்த்தைகள் ஏது?

- 2002 -

# உன் ஞாபகங்கள்

மேகங்கள் கூடி
மலையோடு பேசும்
மாலை நேரமிது...!
ஊர்க்குருவிகளின்
உல்லாச ஊர்வலம்
கண்களுக்குப் புள்ளிகளாய் - அவை
வான்மகள் நுதல் சூடும்
பொட்டுக்களாய் அங்கே!
இன்றைய
பொழுதை இரசிக்கும் மனதில்
சலனங்களே இல்லை
கழுவி விடப்பட்ட
வானத்தை போல
அத்தனை சுத்தமாய்...
அங்கங்கே
தொட்டுச் செல்லும்
மேகத்தை போல
கொட்டிவிடாமலிருக்கும்
சில
ஆத்மார்த்த எண்ணங்களைத் தவிர...



- 1999 -

## முதல் நேசமும் நட்பும்...

என்
இளமை வசந்தங்களை
தடம் புரளாமல்
தற்காத்து தந்த – ஓர்
ஒற்றை ரோஜாவாய்
நீ
மலர்ந்து நின்றாய்... ஆனால்
உன்னை தேடிவரும்
என்பாதை
எப்போதும்
குறுக்குப் படிகளாகவே இருந்தன.......

சிங்கள மொழி வகுப்பைவிட
உன் நேசத்தின்
வாசற்படிகளை தரிசிக்கவே
தொடர்ந்தும் வந்தேன்
வெற்றிப் பூக்கள்
என் கதவைத் தட்டிய போதெல்லாம்
உன்னையும் நான்
மறந்துவிடவேயில்லை.....


தூர..... தூர என
தூரத்தின் அழைப்புக்களே எமை
தழுவிக் கொண்ட போதும்
என் முதல் நேசமும் நட்பும்
உன்னைத் தழுவியே கிடக்கிறது...

பூக்களை ரசிக்க
நீரில் கால் நனைக்க
கற்களும் முட்களும் வழிமறுத்தும்
காடுகளைக் கடந்தேக என
கல்விக்கும் அப்பால்
நாம் கற்றுக் கொண்டது
அநேகம்...
என் உயர்வோடே
உன் கல்வியும் இணைந்து வாராமை
நம் நட்பின் பலவீனமோ
நானறியேன்...

எனினும்
எல்லா நன்மையும் நிம்மதியும்
உன்னையும் ஆட்கொள்ள வேண்டி
அடிக்கடிப் பிரார்த்தித்ததுண்டு
இன்றோ
உன் திருமணச் செய்தி
அமுதிலும் இனிதாய்
எனை ஆனந்தப்படுத்துகிறதடி....
என் பள்ளித்தோழியே
சந்தோச சமுத்திரமாய்
சகலதும் பெற்று வாழ்க...

- 2009 -

# நிலவு



நிம்மதிகளின் உறைவிடம்
நினைவுகளின்
நெருப்புக்கிடங்கு
கவிதையின் களம்
கற்பனையின் கால்கள்
கண்களின் குளிர்ச்சி
காதலின் சாட்சி
இரவின் நீளம்
பகலின் எதிர்பார்ப்பு
உலகின் இதயம்
நட்ஷத்திரங்களின் நண்பன்
கள்வனின் எதிரி
வானத்தின் குழந்தை
தென்றலின் தொட்டில்
சோகங்களின் கட்டில்
தோப்பின் பிரிவு
குழந்தையின் பிடிவாதம்
இதயத்தின் தோழி
ஏக்கங்களின் பெருமூச்சு


- 2003 -

# எழுதாத டயறிகள்......

ஓயாத அலைகளாய்
எழுந்த எழுந்து
எகிறிக் குதிக்கும் எண்ணங்கள்...
எழுதாத டயறியின்
வெள்ளைப் பக்கங்கள்
எனைக் கூவி அழைத்தாலும்
எப்போதுமில்லாத எழுத்துப்பழக்கத்தை
படபடக்கும் தாள்களுக்காய்
நானெப்படி பக்கம் அழைப்பேன்...?

நட்புக் காலத்திலும்
நினைவுக் கலவைகளில்
நீந்திக் குளித்தாலும்
அழுது ஆர்ப்பரித்தாலும்
எள்ளளவும் எண்ணங்களை
எவளுக்கும் அனுப்பாமல்
இன்று மட்டும் - உனக்காக
உள்ளத்தைத் திறந்து சொல்ல
தாள்களுக்கா தவமிருப்பேன்...?

உன் எண்ணம்போல்
அன்பதனை அள்ளி நிறைத்துப்பார்
அத்தனையும் நானாகி
அமிழ்ந்துக் கிடப்பேன்...
ஆழமற்ற கண்கள் மட்டும்
எழுதாத டயறியென
எனை எடுத்தெறிந்தால்
ஏது செய்ய...?



- 24 Feb 2012 -



மல்லிகையென்ற பெயருக்குள்ளென்ன

வெல்லக்கட்டியா

கொட்டிக் கிடக்கிறது...?

இத்தனை தித்திப்பாய்

என்னிதயம் இனிக்கிறதே...

நீ

குடியிருந்த ஞாபகச் சுவடுகளிளெல்லாம்

வண்ணத்தி கூடுகட்டிப் பறந்ததாய்

அத்தனை சுகஸ்பரிசங்கள்...

- 11th June 2011 -

# கவிதை நிலா....

எரிக்கும் வெயில்

வலிக்கும் உடல்

குளிர் ஒத்தடமாய்

இரவைச் சுற்றும் நிலா

தோழியின் வடிவாய்

என் தோளைத் தட்டும்...

மூதன் மூதலாய்

எனை கட்டி முகர்ந்த

என் தோழமையின் கதகதப்பிலும்

என் கவிதை நிலா

மெல்லமாய் கண்ணடித்தது...

காதலையும் பின் தள்ளிய

இந்த நட்பின் வருடல்

நிம்மதியை விசிறிவிடும்...!



- 13th July 2011 -

## இரவே முடியாதே...

பெண்ணழகைப் பாடும்
பிதட்டல் கவிஞர்கள்
இந்த விண்ணழகில் சொக்காமல்
எப்படி மிஞ்சிப்போயினர்...?
சிதறல் தேங்காயில் ஏதழகு
இறைவன் கைகளால்
பிய்த்து விசிறியடிக்க
கலைந்து கிடக்கும்
மேகங்களல்லவா கொள்ளையழகு...?
வார்த்தைக்குள் அகப்படாத
ஒரு நீலவானம்
சில மேகக் குவியல்கள்
பொறுக்க முடியாதாவென
பொறுமை மிஞ்சும்
நட்சத்திர சிதறல்கள்
குளித்துக் குளிர்ந்த
வெள்ளையழகில்
வளரும் நிலா...
சுவர்க்கமுண்டென
வல்லோன் சொல்வதை
வான் கொண்டு நோக்கிடில்
அந்த வசந்த வீட்டின்
முகவரியல்லவா
முன்னெழுதிக் கிடக்கிறது...
இறையறிய
அவன் இயக்கும்
பிரபஞ்ச அழகை
இமைகொட்டாமல் பாருங்கள்
உங்கள் மேனியெங்கும்
மெய்சிலிர்க்கும் ஈமான்...

- 25th Nov 2011 -

# பிரிவதற்கும் விழா

வசந்தங்களை கருக்கிப்போகும்
ஒரு இலையுதிர் கால வருகைக்கு
இத்தனை பெரிய வரவேற்பா .....?
ஏக்கங்களை கண்ணீராய் அறுவடை செய்து கொண்டிருக்க
இந்த சந்தோசங்களை மொழிபெயர்க்க
ஏது நேரம்..? இருந்த போதும்
இளைய பூக்களே
உங்கள் அன்புக்குப் பகரமாய்
இல்லையில்லை
பேரன்புக்குப் பகரமாய்
வார்த்தைகளிலேனும் வாழ்த்தாமல் போவதா?

வளாக மரங்கள்
செந்மலர்கள் சொரியும்
ஒரு சிங்காரப் பொழுதில்
உங்கள் பிரியாத விடை
எங்கள் சுவாசமடைக்கிறது...
சொற்களின்
சிக்கனச் சிலுவையில்
நாம் அறையப்பட்டிருந்தாலும்
சிரிப்பின் வார்த்தைகளால்
அடிக்கடிப் பேசியிருக்கிறோம்...

எனவே
எம் நினைவேடுகள்
ஞாபகங்களால்
படபடக்கும் போதெல்லாம்
உங்கள் முகங்களும்
மௌனமாய் வந்து போகும்...

வண்ணத்துப் பூச்சிகளாய்
வளாக மலர்களில்
தேன் அள்ளிப்போகும் கனவுகள் மறைத்து
பயத்தின் பாஷைகளோடு வந்தீர்கள்
நாம் தான் சிரிப்பின் முகவரி தந்தோம் ஆமாம்
ராகிங் சாவிகளால் சிரிப்புக்கு பாதை திறந்தோம்
பசுமை நிறைந்த நினைவுகளே பாடும்போதெல்லாம்
எம்
அன்புத் தொல்லைகளும் அதில்
ஆத்ம ராகமாய் கலந்திருக்கும்...

பட்டப்பெயர் சொன்னால்
பொத்துக்கொண்டு வரும் – ஊரில்
பட்டப்பெயர்சொன்னால் கோபம்
பொத்துக்கொண்டு வரும்
இங்கு மட்டும் பொசுக்கென்று சிரிப்பு வருகிறதே எப்படி?
இது என்ன
வளாகம் தந்த ஆஸ்கார் விருதுகளா?

இந்த வருடங்கள் நான்கு
இத்தனை சீக்கிரமாய் முடிந்து போனாலும்
மஞ்சள் பூமரமாய்
எம் நேச நினைவுகள்
வாசிக சாலை படிகள் தோறும்
வாசிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்...
உங்களுக்கும்
இந்த ஹந்தானை மலையில்
அன்பாய் மோதும் காற்று
எம் உள்ளார்ந்த வாழ்த்துக்களை
எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்...

வந்து போன
ஓரிரண்டு வருத்தங்களுக்காய்
நம் பூமனங்கள்
விழுந்திருந்தால்
புன்னகையின் பெயரால் மறந்து போவோம்
மீண்டும் நாம் சந்தித்தால்
இடைவெளியில்லா நட்பே
நம் இதயத்தை தொடவேண்டும்...

பிரிவதற்கு முன்னால்
நட்புத்தேர்வில் எம் மனதை வென்றவர்களே
பூக்களால் இந்த வளாகம்
பூஞ்சோலையானது போல்
உங்கள் வரவாலும்
இந்தப் பூலோகம் மணக்க வாழ்த்தி
போய் வருகிறோம் எம் மாணவத் தோழர்களே...

- 2003 -

# காதல் சாபம்

இந்த
காதல் காயங்களோடும்
கண்ணீர்
கோடுகளோடும்
ஏகாந்த
தேசத்தில் வாழும் சாபம்
எதுவரைக்கும்
தொடர்ந்திருக்கும்...?

நியாயப்பட்ட
நினைவுகளோடே
நிழலாகத் தொடர்ந்தேன் என்றா
நீ அமாவாசையாகினாய்...?

கனவுகளிலேனும்
கைகோர்த்து
விடுவேன் என்றா
நீ
இமைகளைத் திருடிப்போனாய்...?

உன் முகத்தில்
கண்விழித்திடும்
சூரியனாவேன் என்றா
நீ
ஐந்து மணிப் பூவானாய்...?

ஆனந்த
இரவுகள் கேட்பேன் என்றா
நீ
இதயராகங்களையே
மீள் ஒலிபரப்புச் செய்கின்றாய்...?

போதும் கண்ணே
போதும்
இனியும்
என் காதல் கேள்விகளும்
கண்ணீர் வேள்விகளும்
உன்
சட்டமன்றத்தில்
சிக்கலைத் தரவேண்டாம்!
சிபாரிசுகளின்
நம்பிக்கையை
எப்போதோ இழந்துவிட்ட நான்
கற்பனையில் மட்டுமே
உன்னைக் காதலித்ததாய்...!



- 2003 -


# காதலுமில்லை கருமாதியுமில்லை......

இடம்மாறி விழுந்த
இரண்டு பார்வைக்கிடையே
சறுக்கிவிட்ட இதயமாய்
சட்டென வெட்டிய
உன் மின்னல் விழியில்
சாஸ்டாங்கமானது எனது மனசும்....

விபச்சார சந்தையில்
நீ மலிவான பொருளெனினும்
நான்
வாங்க நினைப்பதெல்லாம்
விலை மதிப்பற்ற
உன் இதயத்தைத் தான்
வீதிப்பெண்ணாய்
அத்தனைக் கண்களும் உனை மொய்க்கையில்
பத்திரமாய்
பொத்தி மறைக்கிறேன்
உன் மீதான எனது காதலை...

புகையும் சிகரெட்டில்
பொசுங்கும் உன் தேகத்திடமிருந்து
நான்
காப்பாற்ற நினைப்பதெல்லாம்
எப்போதா துளிர்விட்ட
எனக்கான நேசத்தை தான்...

உடலை விற்றவளுக்கு
இனிக்காதலுமில்லை கருமாதியுமில்லையென
உன் அந்தராத்மா
முன் மொழிந்தாலும்
நான் மாலை கட்டி வாழவருவதெல்லாம்
வசந்தம் தொலைக்காத
உன் வாலிப நினைவுகளுடன் தான்
எச்சிலை பொறுக்கும்
நாய்களின் நடுவே
ஒரு மனிதம் சுமக்கும் ஜீவனாகிட
எனக்கும் ஒரு வாய்ப்பு கொடேன்...



- 05th June 2012 -

# நீயும் உன் நினைவுகளும்

உறவென்று நினைப்பதெல்லாம்
உறவல்ல
காலடிகளின் வலிகளைக் கடந்து
உனை
நாடியே வருகிறேன்
ஏன்
ஒரே நிமிடத்தில்
உடைத்துப் போகின்றாய்...?
உயிருக்குள்ளும்
இந்தக்குரல் ஓடிவரவேண்டுமென்று
நாடிவந்ததே
நீதானே...! பின்
ஏன் என்னை
நாடோடியாக்கினாய்...?

எதிர்பார்ப்புகளெல்லாம்
எங்கேயோ போய்விட
கேளாமலே
வந்து கிடைத்தன
வரங்களல்ல நான் சரியில்லையென்ற
உன் சாபங்கள்...!

ஒரு கணமேனும்
நினைத்துப் பார்த்தாயா – இந்த
உயிர் உருகி
கண்ணீர்க் கால்வாய்களில்
கவலைகளுக்கு
வடிகால் தேடுவதை...?
நிலவு வரும் வரை
நட்ஷத்திரங்களையே
எண்ணிக் கொண்டிருக்கும் – இந்த
பெண்ணிலவை....?
ஒவ்வொரு தடவையும்
மலரத்துடித்தே
கருகிப் போகும் – இந்த
கன்(ண்ணி)னியை...?

முடியாது
உன்னால் ஒருபோதும்
முடியாது
இன்னும்
நீ என் மனக்கதவுகளைத்
தாண்டி
உள்ளே வரவேயில்லையே...!

யாசகம் கேட்கும்
தெருப்பிச்சைக்காரனின் பாடலாய்
உனதும் தான் – இன்னும்
உயிர்த் தொடவேயில்லை...
எதிர்பார்ப்புகளை
விதைத்துக் கொண்டேயிருக்கும்
இந்த
ஏழை விவசாயி
செத்துவிடப் போகிறாள்
முடியாத சோகங்களுக்குள்
இவள்
அறுவடையே
அடைந்து போயிருப்பதால்

மொத்தத்தில்
இவளை மத்திம மாகவேனும் – நீ
புரிந்து கொள்ளவேயில்லை
ஆக
இணைந்து விடாமலே
முடிந்து விடப்போகும்
வெறும்
சமாந்தரக் கோடுகள் தானா
நாம்.....???

- 2002 -
ஞானம்

# உடைந்து போன உறவுகள்

இதோ பார்
மின்னலிட்டுச் செல்லும் – உன்
நினைவு வானம்
என்னில் வந்து
மழையடிப்பதை... ஆயினும்

ராதையை தேடும்
கண்ணனின் ஏக்கலில் – தினம்
நான் உலாப்போவது
ஊருக்கே தெரிந்து விட்டது!
இனி
பிரிவில் பயனில்லை...
வா
நம் உடைந்துபோன
உறவுகளை
ஒட்டவைத்துக்கொள்ளலாம்!
மீண்டும் காலக்கடலில்
ஓடம் விடலாம்
செத்துப்போன
மலர்களுக்காய்
சேர்ந்தே ஒப்பாரி வைக்கலாம்!
வந்திடு உயிரே
வண்ணத்துப்பூச்சிகளில்
மின்னும் வண்ணங்களை
சேர்ந்திருந்தே
ஆராய்ச்சி செய்யலாம்!
புதைந்து போன
புஸ்ப்பங்களையெல்லாம்
தோண்டியெடுத்து – நாம்
மாலையும்
மாற்றிக்கொள்ளலாம்
வா...

நவமணி

- 30th Aug 1998 -

# ஆண்கள் கவனத்திற்கு

விசித்திரமான உலகம்....!
உண்மைகளை வஞ்சித்து
பொய்களுக்கு ஆஜராகும் வக்கீலாய்
எத்தனை முகங்கள்..!.
ஆழ்ந்த அன்பையும்
தொடரும் புரிதலையும்
எடுத்தெறிந்து பேசி
அடுக்கடுக்காய் அநியாயங்களை அடுக்கித்தூக்கி
வஞ்சகர்களுக்காய் வாதாடும்
இந்த மாயாவிகளின் உலகம்
எப்போது மாறும்...?

மறுதலிப்பிலேயே தொடரும் வாழ்க்கை
சலித்துக் கொள்கிறது
மங்கித்தெரியும்
எங்கள் மனங்களின் நிஜங்கள்
ஒரு நாள்
இந்த மோசடிக்காரர்களின்
முகத்திரைகளையெல்லாம் கிழித்தெறிந்து
மதுரையில் மின்னிய கண்ணகியின் காற்சிலம்பாய்
ஒளிருமா...?
தீக்குளித்தும் தகிக்கும் தங்கமாய்
எங்கள் தியாகத்தின் வேர்களேனும்
இவர்களை இறுக்கும் வலியில்
புத்தி பெறும் சொற்பமேனும்
எங்கள் நிம்மதிகளாகிடக்கூடாதா.......?

- 2011 -

# பொழியும் மழையில் நிரம்பும் குளங்கள்

திட்டுத்திட்டாய் வந்து
முட்டிக்கொண்ட மேகமே
கொட்டி முடிக்காமல்
கோபங் கொண்டாயோ...
இல்லை
செல்லக் குழந்தையாய்
நேசங்கொண்டு நெருங்கி நெருங்கி
முத்தமிட்டே நீ நனைக்கும் நீரில்
நிரம்புதல் மீறி வழிதலாய்
தொடர்கிறதோ – நம்
வரலாற்றுக் குளங்கள்...?

சின்னத்துளிகளாய் ஆடி
நீ சீறி விதைத்த போது
நெல்வயல்களெல்லாம்
சிங்காரமாய் – உனை
கட்டிக்கொள்ள வந்ததுவே
கெஞ்சும் விழிகளாய்
முளைத்து முன்வந்து
உனைக் கொஞ்ச விழைந்ததுவே
நீயோ
கொட கொடவென கொட்டுவதைத் தொடர
குளத்துடன் சேர்ந்து
குளக்கட்டும் அழுதது...
வாய்க்கால்களெல்லாம்
வாய்பிளந்து குமுறிய கண்ணீரில்
வயல் வெளிகளுமல்லவா
இளமை தொலைத்தது...!
மழையே
நீ இசைப்பது வசந்தத்தின் கீதமா
இல்லை
வறுமையின் வரவேற்பா...?

எம் வாழ்க்கைச் சுற்றுலாவில்
காதலும் இனிமையும்
குளக்கரைகளில் தானே
கைகோத்து நின்றன...?
அதிலும்
குளங்களின் உறவும் இன்பமும்
மழையால் தானே இனித்தது...
இப்போதோ
உன் அதீத அன்பால்
வெள்ளம் பெருக்கெடுத்தோட
குளங்கள் நிரம்பின
ஆனால்
வயிறுகளோடு
எம் உயிருமல்லவா
உடைந்து போனது...

டெங்கும் டயரியாவும்
சிரங்கும்
சிக்குன் குன்யாவும்
அணு குண்டிலும் வலிதாய்
பட்டினியிலும் பெரும் பிணியாய்
எம்மை பிழிந்து பிழிந்து
இயலாமைக்குள் தள்ளி
உணவு
உறவு
உள்ளம்
உயிர் உடைமை அத்தனைக்கும்
எதிரியாக்கி
எம்மை விரக்தியின் விளிம்பில் நிறுத்தி
வேடிக்கைப் பார்க்கிறதே...

பொழியும் மழையில் நிரம்பும் குளங்கள்
ஆஹா
எத்தனை அழகு
வார்த்தையைப் போலவே
நீ வார்த்து நிறைப்பதுவும் அழகென்பதற்கு
குளங்களே நிதர்சனம்
ஆயினும் இப்போ...
அரிசி
மாவு
சீனி
தேங்காய்
வெளிச்சத்திற்கு எண்ணெய் என
அடுக்கடுக்காய் ஏறும் விலையில்
பஞ்சத்தால் நாம் நெஞ்சடைத்து நிற்க
நீ

ஆறுதல் கூறா விட்டாலும்
கொஞ்சம் குறைவாகவேனும்
பெய்யக்கூடாதா....?
மாறாய்
வாழ்க்கைச் சுமையால்
எரியும் மனத்தீயில்
நீயேன்
இலவச எண்ணெய் ஊற்றி
எம்மை
வெள்ளத்திலும் வேக வைக்கிறாய்...?

குளங்களை நிறைத்து
மனங்களை அணைப்பதே உன் பணி
அதைவிட்டு
யுத்தம்
சுனாமி என்றெல்லாம்
எமை கொத்திப்பிடுங்க
நீயுமா
சொந்த மண்ணிலும்
எமை அகதிகளாக்கினாய்.....?
வாழ்வின் கனவை
கேள்வியிலாக்கி
எமை வதைப்பதை விட்டு
உன் பொழியும் அழகில்
குளங்களை நிரம்பு
என் செல்ல மழையே...!

பரிசு பெற்ற கவிதை

- 03rd 2008 -

# பூமித்தாய்க்கு வியர்க்கிறது.....!

பனி சிந்தும் காலை
பருவக்காற்றுடன் பகல்
இதமான வெயில்
இனிப்பான மாலையென
களிப்புடன் வாழ்ந்தது
அதுவொருக் காலமாய் மறந்தே போனது...
ஆர்ப்பரிக்கும் இரைச்சல்
இயந்திரம் கக்கும் புகை
எரித்துப் பொசுக்கும் வெயிலென
எம் நிகழ்காலமோ நகர்ந்து போகிறது...

தொலைவாய் நின்றே
அழகாய்ச் சிரித்த
அந்தி வானச் சூரியன்
சாண் எட்டும் தூரத்தில்
எமைச் சுட்டெரிக்கப்பா பாய்வதுவே
ஏனிந்த வெப்பம்...?



குளிர் தரும் மரங்களை
தேவைக்கும் தரித்தான்
தேர்தலுக்கும் தரித்தான்
நின்றது மழை வென்றது வெயில்
நிலத்தைக் குடைந்தான்
வளத்தைச் சிதைத்தான்
வெளுத்தது நிலம் வரண்டது நீர்

குறைந்தது ஒட்சிசன் கூடிச்சென்றது காபனீரொக்சைட்
உலகில் நிறைந்தது விசமாய் காபன் டயொக்சைட்
கொட்டுமினி அமிலமழை...

கேவலமிந்த மனிதனின் குணத்தால் உறையும் பனியும்
உருகி வழிந்தது பாதி கடலுள் அமிழ்ந்தது மீதி
உயர்ந்தது கடல்
பனிப்பாறை மோதியுடைந்தது டைட்டானிக்
அது இறந்த காலம்
வெப்பம் இப்படியே கூடிப்போனால்
இலங்கையும் ஒரு நாள் கடலில் மூழ்கும்
இது எதிர்காலமென்றால்
எப்படித்தாங்கும் இதயம்...?

ஒரு நாளுடன் முடியும் போலி நிகழ்வல்ல வெப்பம்
மனிதன் செயற்பாடு தோறும் செல்சியஸ் கூட்டும்
நெருப்பு வாழ்க்கை யிதுவென்றே
கொபன்ஹேகனும் தோற்றது...
குறைந்து வரும் மழையும்
கூடியேச் செல்லும் வெப்பமும்
நெருப்பைச்சுமக்கும் பூமித்தாய்
பிரசவிக்கும் குழந்தைகளும்
சுருங்கிய தோலும் வரண்ட உடம்புமாய்
உயிரைக் குடிக்கும் உஷ்ண வாழ்க்கை...

வீசும் காற்றும் அனலாய் அடிக்க
வேர்களுக்கும் தீப்பிடிக்கும்
வெடிக்கும் வெயிலால்
கடலின் மீன்களும் காட்டின் உயிர்களும் பலியாய்ப்போகும்...
நுளம்பும் பெருகும் நோயும் வதைக்கும்
வயிரும் கலங்கும் வயிற்றோட்டமும் பரவும்
வியர்த்தே கொட்டும் பைத்தியம் பிடிக்கும்
மனமும் கெட்டு குணமும் போகும்...
கோபம் எகிறும் இரத்தம் கொதிக்கும்
ஏனிந்த நிலைமை...?
இன்றே முயன்றால் நலவேதும் நடக்கும்
இதுவே தொடர்ந்தால் இந்த பசுமை உலகம்
பஸ்பமாகிப் போகும்..!

ஆசிய பறவைகள் ஐரோப்பாவுக்கும்
அமெரிக்க பறவைகள் ஆபிரிக்காவுக்குமென
பறந்துகளிக்கும்
பருவ காலங்கள் இனிவாராது
பதறித்துடித்தே உயிரின் பல்வகைமைச் சிதறும்
கூட்டுக்காலங்களே இனி சுலபமாய்க் கிடைக்கும்

சந்தோசம் பெருக்கிட
சல்லாபமாய்த் திரிந்திடும்
சுந்தர வனங்கள் இனியிருக்காது
சட்டெனப் பரவும் காட்டுத்தீயால்
சுடுகாட்டு வாசனை சுமந்த
அனலடிக்கும் எரிமலையே
இனி கடலூடன் கலக்கும்...
பொறுமைக்கும் தாயாய்
இந்த பூமி மாதா – இனி
புன்னகைக்குப் பதிலாய்
பொசுக்கும் பேயாவாள்
அவள் கூட்டைத் தணிக்கும்
குடையாய் வந்த
ஓசோனுக்கல்லவா இந்த மனிதன் வேட்டு வைத்தான்
கனிஊதாக்கதிர்கள் இனிநேராய்த்தாக்கும்
நிம்மதிச்சாகும் நித்திரைச் சிதறும்
தோல்நோய்கள் பெருகும் தொல்லையாய்ப் போகும்...
சொரிந்து சொரிந்தே – இனி
விரல்களுக்கும் சுழுக்கு விழும்...

தென்றலும் ஒரு தாலாட்டாய்
இனி தேகம் சிலிர்க்காது - மாறாய்
தகிக்கும் வெப்பத்தால்
பசும் நிலங்களும் பாலைவனங்களாய் மாற
எல்நினோ லாநினோ தாண்டி
சுழற்றும் சூறாவளியில்
பெய்யும் துளி மழையும்
வெள்ளமாய்ப் பெருக்கெடுக்கும்
பெரும் மலைகள் சரிந்து விழும்
எங்கும் அபாயம் அபாயமென்ற
அவலக்குரலொன்றே
ஓங்கி ஒலிக்கும்...
விடை பெறும் மழையும்
வரவேற்கும் வெப்பமும்
வெறும் வேடிக்கைப் பேச்சல்ல
உலகின் கோடானு கோடி மக்கள்
எதிர்காலத்தின் மீதான அவலச்சங்கு
அது முடிந்தே போவதும் தொடர்ந்தும் கேட்பதும்
உஷ்ணத்தை குறைப்பதிலிருக்கு
அது எங்கள்
அறிவின் புரிதலிலிருக்கு
புதையாமல் காப்போம்
பூமித்தாயை..!!!

பரிசு பெற்ற கவிதை
- 03rd 2008 -

# கவ்வாத்து மலைக் கனவுகள்

பொழுதுகள் விடியும் போதெல்லாம்
எங்கள் நாளாந்த ஏக்கமோ
ஒரு பானைச் சோற்றுக்கே தவமிருக்கிறது....
சுகம் என்பதைக்கூட
அப்பப்போ நாங்கள்
சோகங்களுக்குள்ளிருந்து தான்
சுவைத்துக் கொள்கிறோம்...
நிதம்
சேற்றில் புதையும்
எங்கள் கால்களும்
கொழுந்து பறித்தே
கரைபடிந்து போன எங்கள் கைகளும்
மேடைப் பேச்சுக்கென்னவோ
உழைக்கும் கரங்கள் தான்
மிச்ச நேரமெல்லாம்
வெறுமையின் குரல்களே
எங்கள் வேர்களை வாசிக்கின்றன...



கிழிந்துபோன சப்பாத்துகளுக்குள் தான்
எங்கள் கிளிகளின்
எதிர்கால உலகமே ஒளிந்துக் கிடக்கிறது...
ஒட்டுப் போட்டத் துணிகளும்
ஒழுகும் கூரையும்
எங்கள் இலட்சியத்தையே
சல்லடையாக்கிப் போனதை
எத்தனை முறைதான்
எடுத்துச் சொல்வது....?
எண்பதுகளிலிருந்து தானே இனப்பிரச்சினை
எங்கள் துயரத்தின் வேர்களோ
மூன்று சகாப்பதங்கள் முன்னோக்கியவை...
மாசியும் தேங்காயும் தேடித்தேடியே
இத்தனை நூற்றாண்டுகளை
தோற்றுப் போனோம்
இனியும் எதைத்தோற்பது.......?

- 2012 -

# ஒரே குத்தில் கதையை முடி

பூப்படைந்த பெண்ணாய்
கன்னச் சிவப்பில்
நாணிச்சிரித்திட
மொட்டுத்தவமிருந்த
ரோஜாச் செடியே...
சின்னஞ் சிறுசுகளை
கொஞ்சுவதாய் கெஞ்சியழைத்து
கொத்திக் குதறிப்போடும்
பேய்களா உன்னையும்
மொட்டிலே எட்டிப் பறித்தது...?
இருக்கும் உரமெல்லாம் நுனிசேர்த்து
நறுக்கென்று கீறிக்கிழித்துவிடு
பினந்தின்னிப் பேய்களாய்
செத்து மடியட்டும்
பாவம்
பறிக்காமலே
உன்னில் பழகிடத் துடித்த
பிஞ்சுப் பாலகனை
ஏன் கிழித்தாய் முள்ளாலே...?
இப்போது பார்
நீ முகங் காட்ட வரும்போதே
மடக்கிப் பிடிக்கிறான்
மொட்டு மொட்டாய்
உன் தலையில் குட்டு வைக்க...
**என்ன செய்ய**
மகிழ்ச்சி அவனுக்கு
வயதுக்கு வருமுன்னே
வாழ்விழந்த சோகம்
உன் மொட்டுக் குழந்தைக்கு...



- 13th Mar 2011 -

## பத்தனையில் ஒரு பயிற்சி முகாம்

காற்றும் மரமும்
கலந்து சிரிக்கும்
கண்டியின் கிளைநகர்
இழுத்துப்பிடித்த போர்வைக்குள்ளும்
சிநேகமாய்ச் சீறியடிக்கும்
நீர்த்திவலைகள்
படிப்பைத் தாண்டி
பொழுதையிழுக்கும்
பொல்லாத குளிர..........

O / Level க்குப் பின் A / Level
பல்கலைக்கல்வி பின் பதவி
என்பதெல்லாம்
ஆனந்த அழைப்புக்கள்
இந்தப்பயிற்சிக்கான அழைப்போ
அப்படியிருக்கவேயில்லை...

அன்புக்கும் அலுவலுக்குமிடையே
சிக்கித்தவித்தது
மனசு....
அன்பு மகனை
ஆசைக்கணவனை
இனிக்கும் விடுமுறையை தடுக்கத் தடுக்க
அங்குமிங்குமாய் அள்ளித்திணித்திட
எங்களை இப்படியிழுத்துச் சேர்த்தது
எப்படியினிக்கும்.......?

இனித்தது
மேடு பள்ளம்
இரவு காலை
எங்கள் சுமையும்
சுகமாகச் செய்த இன்னொரு
கல்லூரிச் சாலை

Devon
St. Clair
Elgin
Ebadin
Ramboda
பத்தனை வெளிகளின் அத்தனைப்
பனித்துளிகளையும் அள்ளிச் சேர்த்து
ஒன்றாகக் கொட்டிய
இன்னொரு Autograph...

அழுக்குகளென்னவோ
சுவாசத்தைத் தடுக்கும்
ஹாஸ்டல் அழுக்குகளென்னவோ - என்
சுவாசத்தைத் தடுக்கும்
இந்த அள்ளிக்குளத்து அன்னங்களோ
என் நேசத்தைத் தூண்டும்
இந்தச் சூழலின் நேசத்தைத் தூண்டும்.....

காய்ச்சலும் தடுமலும்
கவனத்தைக் கலைத்தன
முட்டையும் பருப்பும்
மூச்சையடைத்தன - ஆனாலும்
கவனமென்னவோ
அறிவைத்தேடியது...

அழகிய நீரூற்றே
நிழல்தரும் மரங்களே
நேசத்தின் ஆசான்களே
போய் வருகிறோம்....!

- 2009 -

# என் தேசத்தின் எழுச்சிக்காய்...!

ஓ என் சமகாலத்தோழர்களே!
என் தேசத்தின்
எழுச்சிக்காய் என்ற போது தான்
என் விழிகளில் மீண்டும்
கங்கை வரக்கண்டேன்....!

கால ஓட்டங்களில்
இழப்புக்கள் மறந்து போனாலும்
என் தேசத்தை
நோக்கிய அம்புகள்
வளங்ளை
வாழ்விடங்களைத் தாண்டி
ஆத்மாக்களையும்
காயப்படுத்திவிட்டது.



அமைதிப் பூக்களால்
நிரம்பி வழிந்த
என் ஆத்ம தேசம்
சில்வாவும் செல்வாவும்
சினேகமாய்க் கைகோர்த்தே
சிரித்து மகிழ்ந்திருந்த – என்
சிறிய தேசம்
முகாரிக்குள்
விழுந்தமெட்டாய்
இனவெறிக்குள்சிக்கி
சிதைந்து போனது...!

தென்றல் தவழ்ந்து
பூமிப்பரப்பெங்கும்
புத்துணர்வூட்ட
பூக்கள் தலையாட்டச்
சிரித்திட்ட
இப்புண்ணிய பூமிதனில்
இன்று
போர்க்காலப் பாடல்களே
தேசிய கீதமாயின....

ஸ்வரம் தராத
தந்திகளாய் – எத்தனையோ
இளம் ரோஜாக்கள்
இறப்பெய்தி போயின...
என் தேசக்காற்றிலும்
அபஸ்வரங்களே
சங்கமமாயின...

போதும்
என் தேசத்தோட்டத்தில்
யுத்தத்தை விதைத்து
மனித உயிர்களையே
அறுவடைச் செய்ததும்...
எழுந்து வந்த – என்
தாய் நாட்டின்
இடுப்பொடித்ததும்
எங்கோ
பறந்து திரிந்த
இளம் சோடிப்புறாக்களை
யுத்த மேகங்களே
படர்ந்த வானில்
இரத்தம் சொட்டச்சொட்ட
சமாதானக்குறி காட்டியதும் போதும்....

ஓ என் தோழர்களே
இனியும்
தொடர்ந்திடும்
துயரங்கள் விடுத்து
எம் தாய் மண்ணின்
தலைவாசல்களை
நேசங்களால் நிரப்பி
தேசத்தின்
எழுச்சியை மட்டுமே
நிலைத்திடச் செய்வோம் வாருங்கள்.

- 2002 -

# நிலைபெறத்துடிக்கும் சமாதானம்

இலங்கையில் வேண்டும் சமாதானம்
இன ஒற்றுமையே அதற்கு ஆதாரம்
இன்ப ஊற்று செழிக்கும் நம் பொருளாதாரம்
இன்றே மலரட்டும் சமாதானம்

இழிசெயல்கள் இடிந்து விழட்டும்
பழிபாவங்கள் மடிந்து போகட்டும்
பலியாகும் மனித உயிர்களை மதிக்கட்டும்
வலியில் துடிக்கும் உள்ளங்கள் சிரிக்கட்டும்.

பேதங்கள் எங்கும் பொசுங்கட்டும்
போதனைகளை ஏற்று நடக்கட்டும்
பொல்லாத பிரிவினைவாதம் அழியட்டும்
பிரித்தாளும் பேயின் தாண்டவம் ஒழியட்டும்

உரிமைகள் யாவர்க்கும் உண்டென்பதை
உண்மை என்று உயர் மட்டம் விளங்கட்டும்
உயர்வுக்கு வழியை உழைப்பால் பெறுவதே
உன்னதம் என்பதை அனைவரும் உணரட்டும்.

சகோதர சமத்துவங்கள் நிலைக்கட்டும்
சட்டம் இருட்டிலும் ஒளிபெறட்டும்
சந்தேகமனப்பாங்கு மறையட்டும்
சந்தோஷ ஒளி எங்கும் பரவட்டும்



கங்குலிலே காட்டுவழிபோன – அந்தக்
கறுப்பு நாட்கள் மறையட்டும்
கவலையின்றி நாம் களிப்புற்றிருக்க
இன்றே "வெள்ளைப் புறா" பறக்கட்டும்.

- 1996 - பரிசு பெற்ற கவிதை
"கலைத்தாரகை"
ஆமினா கல்லூரி வெளியீடு

# விடிவைத்தேடி

ஏட்டைத்தொடுவதும்
பாவமென்ற பதாதைகள் தகர்த்து
வீட்டையும் தாண்டி
வெளியில் வந்துவிட்ட
பெ(வெ) ண்ணிலவுகளுக்கு இன்னும்
வாழ்க்கை மட்டும்
விடியாத பொழுதுகளாகவே...

வருந்தி வருந்தி நிதம்
தாரமாய்,
தாயாகி சேயாகி
சேவகம் புரிந்திட்ட போதும்
பெண்ணடிமைப் பட்டியலில்
இன்னும் மட்டமான மருமகள்களாகவே

மாதங்கள் ஓடி
மாருதம் ஓய்ந்து
மிலேனியம் வந்துற்ற போதும்
மணமகள் சந்தையில் – இன்னுமே
இவர்கள் மணக்காத பூக்களாய்...

அறிவின் செறிவால்
அகிலமே விடிந்திருக்க
அங்கே
ஆம்ஸ்ட்ரோங்கை போலவே
வெலன்டினாவும் நிலவில் நடக்க
இங்கே
பெண்பார்ப்பு அரங்கில் மட்டும்
இன்னுமிவர்கள்
பேசா பதுமைகளாகவே...



நிலவின் கரை பற்றி
குறைபேசாது
கன்னியர் கற்பை மட்டும்
உரசிப்பார்த்து
கரம்பற்றும் கண்ணிய உலகம்!
ஆனால்
சிவப்பு விளக்குகள் மட்டும்
இன்னும் அணையாமலே...
பெண்ணாளும்
பூவுலகிலும்
இவர்கள் வாழ்வு
இருண்டே கிடக்கிறது...

இத்தனை
அமாவாசைகளுக்கு நடுவேதான்
இன்னும் பௌர்ணமி
காணா நிலவுகளாய்...
ஏக்கப் பெருமூச்சுக்கள் சுமந்து
மலையேறும் கர்ப்பிணிகளாய்
விடியலைத் தேடும்
பூபாளங்களாய்
இந்தப் பெண் பூக்கள்
கண் பூத்திருக்கின்றன
விடிந்து விடக்கூடாதா?
காலம் தான் கனிந்து விடக்கூடாதா?

# ரோஜா...



நீயில்லா
நந்தவனம்
நிலவில்லா வானமாய்
மற்றைய பூக்களால்
மல்லாந்து கிடக்கும்...
முட்களோடும்
முகமலர்ந்து சிரிக்கும் ரோஜாவே
நீ தான்
மலர்வனத்தின்
தவப்புதல்வி...!

- 2000 -

# இரவின் ஜாலங்கள்

நீல வண்ண
பட்டு விரித்தாற்போல்
அந்த
இராக்கால பொழுதுகள்....
பட்டுச் சரிகைகளில்
பட்டுத் தெறிப்பதுபோல்
அங்கே
கொட்டமிடும் நட்சத்திரங்கள்...
கொட்டிச்சிதறும்
நட்சத்திர ஒளியிலே
சிறு மின்மினிகள்
வழிதப்பாமல் பறக்கும்...
யாரங்கே
வண்ணங்கள் பூசியது
உள்ளங்கள்
ஊகித்தறிய
திணறும் வண்ணம்...?
இந்த
மர்மவேள்விகளை
விடிய விடிய நிகழ்த்தும்
அந்த
நட்சத்திர நாயகன் யார்?

சூரிய கண்ணனின்
சுடரொளி பட்டதும்
ஜாமமெல்லாம்
ஜாலங்கள் புரிந்த
அற்புதங்களையெல்லாம்
அள்ளிக்கொண்டு
பகலின்
அனல்கிடங்குகளில்
ஒளிந்துகொள்ளும்
அந்தச் சுட்டிக்
குழந்தைகள் தான் யார்...?

- 1998 -

# வரப்பிரகாஷ்

நாளைய பொறியியலாளனாய்
மக்கள் சேவகனாய்
உலா வரும்
கனவு கண்டாய் தோழனே!
உன்
கனவு கலைத்து
இனிய வதனம் சிதைத்து
பலவந்த
காவு கொடுத்தனர் உன்னை
மண்ணுக்கு!
பெற்றோர் துடிக்கும் நிலையெண்ணி
ஒளிராது மங்கிய
உன் பிரகாஷமெண்ணி
மனம் கசிந்து
பிரார்த்திக்கின்றேன்
உன் ஆத்ம சாந்திக்கு
என் அஞ்சலி உரித்து.

- 1997 -
நவமணி

# செம்மணி

அங்கே
சூரிய கந்தையை
சூரியக்கதிர்கள் போல்
ஆக்கிரமித்துக் கொண்ட – எம்
அரசியலின் வேகம்!
இங்கே
செம்மணியில்
செம அதிர்ச்சிகள் காத்திருந்தும்
சும்மா இருப்பது ஏனோ...?
அங்கே
பலநூறு உயிர்கள்
இரகசியக்கிடங்கில்
உறங்கிக்கிடக்க
இங்கே
அடங்கிக்கிடக்கும்
நியாயங்களைத்
தட்டி எழுப்புவது
யாரோ...?

- 1998-
நவமணி

# சுசந்திகா




கண்டங்கள் பல தாண்டி
கால் கடுக்க ஓடி
வெள்ளி
பதக்கத்தை வென்று – எம்
குட்டி நாட்டுக்கு
ஒளிபாய்ச்சிய வெண்ணிலவே
ஓடு
ஓடிக்கொண்டேயிரு ஒலிம்பிக்
வரையில்
தூற்றுவார் தூற்றட்டும்
போற்றுவார் போற்றட்டும்
முத்தான நாட்டின்
சொத்து நீதான்
எம் மங்கையர் வானின்
விடிவெள்ளியும் நீதான்

- 1997 -
நவமணி

எனக்குள் விழாநடத்தும்
உனக்கான கவிதையிது...!

தினந்தோறும் வாசிக்கும் தினத்தந்தியாய்
பார்த்து பரவசமாகும்
என் செல்லக் குழந்தையின் முகமாய்...
உன்னை நினைக்காத இரவும்
உன்னை சுவாசித்து விழிக்காத விடியலும்
கரிநாளாய் காற்றில் கரையும்...
உலகின் உச்சியில் நின்றாலும்
அருகிருந்து ஆராட்டும்
என் ஆத்மார்த்த காதல் நீ...
அழகு
அமைதி
புன்னகை பூக்களென
அத்தனை புதுமைகளும்
உன்னிலிருந்தே புறப்படுகின்றன...
ஞாபக அலைகளாய்
எனக்குள்ளிருந்து ஆர்ப்பரிக்கும்
உன் சத்தங்களின் சாஸ்வதத்தில் தான்
எதுவுமேயில்லாத இந்த பூமியில்
எல்லாமே நீயென
இன்னுமே உயிர்வாழ்கிறேன்...
அடித்து ஆர்ப்பரிக்க நான் நனைந்த
என் பருவகால மழையாய்
தூரவிருந்தே தலைதுவட்டும்
என் பால்யகாலத் தோழியாய்
பசுமையெல்லாம் புசித்து நிற்கும்
நீ என்ற கவிதையை
அறியாமைச் சிறுவர்கள்
அசிங்கங்களால் கலைத்துப் போடுவதை
அனுமதிக்கவொண்ணா என்னிதயம்
அடிக்கடி அழுதுக்கொள்வதை
உனக்கெப்படிச் சொல்வேன்
அழகிய எனதூரே...?

- 25th Nov 2011-

## ஒரு கூடை சோகம்...!

சூரியனை நம்பி

விளக்கை தொலைத்தவள் நான்

இருள் என்னைக் கொல்லும் போதெல்லாம்

வராத

நிலவையும் கூட சபித்துக்கொள்கிறேன்

பொதுநலவாதியென்ற போர்வையில்

என் தவறை மறைத்தபடி...

கொட்டிக் கிடந்த சந்தோசங்களை

பொறுக்கத் தெரியாத சோம்பேறியாய்

ஒரு கூடை

சோகங்களை சுமந்து கொண்டவள் நான்...

உறவென்று நினைத்து

பிழைக்கு சரிபோட்ட பாவம்

விடாமல் துரத்துகிறதென்னை...

- 26th March 2012 -

*ஹைக்கூ கவிதைகள் சில...*

கவனம்
விழுந்துவிடக்கூடும்
வீதியில் வாழைப்பழத்தோல்....!

மேகம்
நெல் விதைக்கிறது
மழைத்துளி...!

இறைவனளித்த
இலவச விசா
மரணம்...!

சோம்பேறிகள்
சொல்லும் வார்த்தை
விதி...!

தினமும்
ஒரு இலவசத்திரைப்படம்
கனவு...!

யுத்தம் குத்திய
இறுதி முத்திரை
அகதி...!

கேளாமலே கிடைக்கும்
வரங்கள்
சாபங்கள்

கைகளில் துப்பாக்கி
வீதிகளில் கடையடைப்பு
வானத்தின் வெண்புறா

பகிரங்க ஆடைகலைப்பு
மரங்களுக்கு
இலையுதிர்காலம்

உள்ளே வரவில்லை
அனுமதியுமில்லை
வாயிலில் பூட்டு

- 2000 -
வீணை பிரியாவிடை
இதழ்

# எனதூரே எனதுயிரே

அழகான மலை மேவும் ஊரே
என் உளம் தேடும் ஆனந்தம் நீயே
செல்வகந்தைதான் உனக்கான பெயரே
எங்கு சென்றாலும் நினைவெல்லாம் உனதே
(அழகான மலை மேவும் ஊரே)

இசைபோல நதிபாயும் சுனைகள்
நான் சுகம் தேடி அலைகின்ற வெளிகள்
குளிர் போர்வை தனைபோலச் செடிகள் – எம்
குளிர்போக்கும் தேனீரின் இலைகள்....
தேன் சிந்தும் இளந்தென்றல் தழுவும்
எம் தலைமீது இலை பூக்கள் சொரியும்
எதிர்கொள்ளும் வளைவுள்ள வழிகள்
அவை விதிவெல்ல பல சொல்லும் கதைகள்
(அழகான மலைமேவும் ஊரே...)

அடிவானில் செம்மேகம் உறையும்
செல்வ மலையெங்கும் நிலாக்கோலம் வரையும்
இருள் மெல்ல எமை சூழ வரினும்
வெள்ளி நிலவோ அப்போதும் எமை பார்த்து சிரிக்கும்...
(அழகான மலைமேவும் ஊரே...)

- 2011 -

# ரீஸாவின் கவிதைகள்...

# நிலாப் பெண்

நிறம்
தெரியாமல் போன
அந்த நீல
வானத்தில்
மணநாளா
இன்று?

ஆர்ப்பாட்டம்
ஏதுமில்லாது
அலங்காரம்
செய்து கொண்ட
நட்சத்திர தோழிகள்
நடுவில்
உலா வருகிறாள்
நாயகி
நாணிச்சிரிக்கிறாள்
நிலாப்பெண்!
அவள் தான்
மணப்பெண்ணோ?

நாயகன்
வரவில்லையென்று
உதய காலத்தில் உயிர் துறந்தாளா?
விடியலில்
எங்கே போனாள்
அவள்?

இருளில் மட்டும்
முகம் காட்டும்
நீயும்
சிவப்பு விளக்குதானா?
உன்னிலும்
கறை
இருக்கிறதே?
இரவுகளில்
இதம் தரும்
இந்த
வானம்!
ஏன்
இன்று இப்படி?
என் இதயம்
போல்...
நிலவின் முகம்
காணவில்லை!
கண்சிமிட்டும்
நட்ஷத்திரங்களின்
புன்னகையில்லை
தென்றலின்
பாச உந்துதலில்
உற்சாக
ஊர்வலம் போகும்
மேகங்கள் இல்லை

உள்ளமெங்கும்
அப்பிக்கொண்ட
சோகத்தைப் போல்
வானில்
ஏன் - இந்த
பனி மூட்டம்...?

சில
சோகங்களும்
சுகமானது போல்
வளரத்துடிக்கும்
புன்னகை நிலவையும்
வாழத் தவிக்கும்
சின்ன நட்ஷத்திரங்களையும்
மறைத்து விட்ட
இந்த
பனித்தாவணியும்
அழகாய் உள்ளது
மனம்
ரசிக்கும் மட்டும்

- 22 Sep 1997 -

பூவே...
பொன்மணியே!
உன்னுடன்
சிரிப்பதிலும்
அழுவதிலும்
ஒரு
சுகம்
இருக்கிறது
உன்னை பிரிந்து
இருப்பது மட்டும்
ஏன்
யுகமாய்
இருக்கிறது!

சுகத்தில் ஒரு யுகம்
யுகத்திலும் ஒரு சு(சோ)கம்!

- 1998 -

## மலைவாசம் வேண்டி ஒரு மலர்

நான் பிறந்த ஊரின்
எந்த எல்லைக்குப் போனாலும்
உன் முகத்தையோ, முதுகையோ
காட்டி நிற்கும் மலையே!

உன் உச்சிக்கு வரவா?
உயிர் துறக்கவல்ல உயிர்வாழ!
உன் பாதத்தை முத்தமிடவல்ல
உன் உச்சி முகர

நீ ஈன்ற குழந்தைகளைக் கொண்டு
என்னை நீ உபசரி
உன் பாலாற்றில் என்னை நீராட்டு
கண்களில் கோளாறு கொண்டவர்களிடமிருந்து
என்னை நீ காப்பாற்று
உன் சேலைப்பனியில் என்னை ஒருதரம்
துவட்டிவிடு

துவண்டு போன உள்ளத்திற்கு துயில் கொடு
சூரியனின் அஸ்தமனத்தையும்
சந்திரனின் ஆரம்பத்தையும்
காட்டித் தா - இந்த உள்ளத்திற்கு
உன் பலத்தை சொல்லித் தா!
மலையே! உன் மார்பைத் தா!
மனம் விட்டு இந்த மலர் அழவேண்டும்

மலையே உன் மடி தா
மயங்கியே இந்த மங்கை துயில வேண்டும்
அருவியில் எனக்கு ஊஞ்சல் கட்டு
ஆலம் விழுதில் எனக்கு தொட்டில் கட்டு
மூங்கில்களே என்னைத் தாலாட்டு
மரங்களே ஓலைகளால் ஏடு கொடு
நான் நிறைய எழுத வேண்டும்!

பறக்கும் புறாவே தூது கொண்டு போ
என் தோழிக்கு நான் இருக்குமிடம்
சொல்ல வேண்டும்.

- 12th July 1998 -

பரிசுப் பெற்ற கவிதை

# வேண்டும்

அல்லாஹ் உலகை
அழகாய்ப் படைத்தாய், அதில்
ஆணையும் பெண்ணையும்
ஆசையுடன் படைத்தாய்
பாவையர் எமக்கு ஒரு நாள் வேண்டும் அன்று
பார்முழுவதும் நாம் சுற்றி வர வேண்டும்
அப்போது எமக்கு சுதந்திரம் வேண்டும்
மறுமையில் எமக்கு சுவர்க்கமும் வேண்டும் :
அதனால் அல்லாஹ் ஒரு நாள் வெண்டும், அதில்
ஆண்கள் அனைவரும் ஆழ்ந்து உறங்கிட வேண்டும்

குமிழ் மலர் கொண்டு வரும்
கடல் அலையில் குதிக்க வேண்டும்
குடை மேகம் கொண்டு தரும்
மழை மலரில் குளிக்க வேண்டும்
அருவியில் ஆசை தீர
ஆட வேண்டும்
பனிமலையில் ஓசையின்றி சறுக்கி
ஓட வேண்டும்

பனித்துளியை நான் வட்டமிட வேண்டும்
பூ நடவில் நான் சத்தமிட வேண்டும்
பால் நிலவை நான் முத்தமிட வேண்டும்
அங்கிருந்தே நான் பட்டம்விட வேண்டும்.

வானில் பறக்க இரு சிறகு வேண்டும்
பஞ்சு மேகத்தில் ஒரு இருக்கை வேண்டும்
வானவில்லை பூமிக்கு ஏணியாக்க வேண்டும்
வான் பிறையை பூமிக்குத் தோணியாக்க வேண்டும்.

மீன்களும் மிருகங்களும் எனக்கு
சொந்தங்களாக வேண்டும்
அவையின் பாசைகளும் பரிபாசைகளும்
எனக்குப் புரிய வேண்டும்
அவற்றுடன் பேசிப் பேசி நானும் மகிழ வேண்டும்

நடுக்காட்டில் நான் தங்கி வர வேண்டும்
முள்கூட என் காலை முத்தமிட வேண்டும்
நடுக்கடலில் நான் முங்கி வர வேண்டும்
முத்துக்கள் என் தோளில் முந்தானையாக வேண்டும்.

உச்சி மலையில் புல்வெளியில்
பூக்களால் வீடுகட்டி நிமிடங்கள் கண்மூடி
தென்றலாய் நான்வந்து என் வீட்டின்
கதவு சாத்தும் போது
ஆண்கள் அனைவரும் விழித்தால்
போதும்...

- 19th Oct 1996 -

## நமக்குள்.......

வாரத்தில்
ஒரு முறை பூக்கும்
ஞாயிறு மலர்களா
நாம்!...?

நம் வாழ்க்கைப்
பாலையில்
இன்னும்
உடன் போக்குதான்
இல்லை
திசை மாறிய பறவைகளா
நாம்!...?

ஊடல்
பிரிதல்
இருத்தல்
இரங்கல்
இவை அத்தனையும்
ஏன்
நமக்குள்...?

என்று தான் தோழியே
நானும்
புலம் பெயர்ந்தால்
நமக்குள் ஒற்றுமை
கூடிவிடும்
எண்ணிப்பார்த்தாயா?

நம் பாதைகள்
வெவ்வேறு
ஆயினும் – நம்
பயணங்கள்
ஒன்று போல்
அல்லவா உள்ளது

நானும் நாள்தோறும்
சிந்திக்கிறேன்
ஆயர் குலத்தவர்
போல் – நமக்குள்
இடைவெளி அதிகம்
என்பதாலா?

நம் உணர்வுகள்
என்ன
காதலா?
ஆம் காதலே தான்
நட்புக் காதல்

நல்ல வேளை
துணைப்பாலினமாக
நாமில்லை – இருந்திருந்தால்
இந்த சாக்கடை சமூகம்
மட்டுமல்ல
நானும்
நீயும் கூட
சந்தேகித்திருப்போம்

நம்மை
நம் காதலை
நம் நட்பை

- 22nd March 1998 -

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் அமைந்துள்ள சங்கப்பலகை இலக்கிய ஆர்வமுடைய பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு வெளியீட்டுக்களமாகவும், எழுதுவதற்கான தூண்டு கோலாகவும் செயற்பட்டு வந்திருக்கிறது. இதனை ஒரு கையெழுத்துச் "சுவர்ச் சஞ்சிகை" எனல் பொருந்தும். தமிழ்த்துறையின் பொறுப்பிலுள்ள இச்சுவர்ச் சஞ்சிகையில் மாணவர்கள் ஆர்வத்துடன் தங்கள் படைப்புக்களை வெளியிட்டு வந்துள்ளனர். பேராசிரியர் தில்லைநாதன் இதனைத் தொடங்கி வைத்தார். கலாநிதி துரை. மனோகரன் உத்தியோகப்பற்றற்ற முறையில் சங்கப்பலகையின் பொறுப்பாளராக இருந்து மாணவர்களை உற்சாகப்படுத்தி வருகிறார்.

கடந்த சுமார் பத்தாண்டுக் காலப்பகுதியில் சங்கப் பலகையில் இடம்பெற்ற ஏராளமான கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 37 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. 24 இளம் கவிஞர்கள் இவற்றை எழுதியுள்ளனர். இளங் கவிஞர்கள் எனினும் இக்கவிதைகள் இவர்களின் கவித்துவ முதிர்ச்சியை இனங்காட்டுகின்றன. சில கவிதை வரிகள் வியப்பூட்டும் கவித்துவ வீச்சைக் கொண்டுள்ளன. உதாரணமாக செல்வி ஜெஸீமா ஹமீட் அவர்களின் "நிழலின் காலடியோசை" என்ற தலைப்பில் அமைந்துள்ள ஒரு கவிதையை மட்டும் நான் இங்கு சுட்டிக் காட்டலாம். தலைப்பிலேயே கவித்துவ வீச்சு வெளிப்படுகின்றது. இளம் உள்ளத்தின் ஒருதலைக்காதல் உணர்வை கவிதையின் ஒவ்வொரு படிமமும் மனதைக் கவ்வும் வகையில் வெளிப்படுத்துகின்றது.

காற்றென்னைக்
கடந்துபோகையிலும்
நிழலென்னைத்
தொடர்ந்து வருகையிலும்
அதன் காலடியோசை
உன்னுடையதோவென
திடுக்கிட்டுத்
திரும்புகிறேன்



என்ற இறுதி வரிகள் இடையறாது எதிர்பார்ப்பில் தவிக்கும் உள்ளத்தின் பதற்றத்தைச் சொற்சிக்கனத்துடன் வெளிப்படுத்துகின்றன. ஆண்களாயினும் பெண்களாயினும் பேராதனையின் வளமான இலக்கியப் பாரம்பரியத்தின் வாரிசுகளாக உருவாகும் தகுதி இதில் இடம்பெற்றுள்ள கவிஞர்கள் அனைவருக்கும் உண்டு.

பேராசிரியர்
எம்.ஏ. நுஃமான்
தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

ISBN 978-955-54388-1-5
9 789555 438815
Rs. 250/=